THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 22nd August 1960

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Houses for Policemen

*248 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவில் எங்கெங்கு போலீஸ்காரர் களுக்கு வீடுகள் கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது?

(ஆ) எத்தனை வீடுகள்?

(இ) எவ்வளவு செலவில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) to (இ) A statement [a] is placed on the Table of the House.

Wall-posters

*251 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சுவரொட்டி விளம்பரங்களை யெல்லாம் சர்க்காராலோ அல்லது பஞ்சாயத்து போர்டு முனிசிபாலிடி கார்ப்பொரேஷன் மூலமாகவோ குறிப்பிடப்படும் இடங்களில் மட்டும்தான் ஒட்டப் படவேண்டுமென்று சட்டமியற்றப்படுவது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

Arecanut

*261 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர், ஜில்லா கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தளவாடி, மலைப் பிரதேசத்தில் பாக்கு உற்பத்திக்கான திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா?

(ஆ) அப்படியானால் விவரங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

---

[a] Printed as Appendix I on page 401 infra.

[22nd August 1960

SRI P. G. MANICKAM: பவானிசாகர் வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தாளவாடி மலைப் பகுதியில் பாக்கு உற்பத்தி செய்வது பற்றி பரிசீலனையின் விவரம் சர்க்காருக்கு அறிவிக்கப் பட்டதா? அறிவிக்கப்படாவிட்டால், என்ன பரிசீலனை நடந்தது என்று அமைச்சர் அவர்கள் விசாரிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விவசாய இலாகாவிலோ அல்லது காட்டிலாகாவிலோ அம்மாதிரி ஒன்றும் யோசனை இல்லை. வேறு தகவல் அரசாங்கத்திடம் இல்லை.

Beggars

*271 *Q*.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "The Madras Prevention of Begging Act, 1945" எந்தெந்த நகரங்களிலே அமுலில் இருக்கிறது?

(ஆ) இதுவரை எத்தனை பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதிலிருந்து தடை செய்யப்பட்டார்கள்?

(இ) தடை செய்யப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு என்னென்ன விதமான உதவிகளும், தொழில்களும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The list [a] of places to which the provisions of the Madras Prevention of Begging Act, 1945, have been extended, is placed on the Table of the House.

(*b*) The particulars are not furnished as the time and labour involved in collecting them from 1945 onwards will not be commensurate with any public interest that is likely to be served.

(*c*) The following handicrafts are tought to the inmates of the Begger Homes in mofussil:—

(1) Spinning.

(2) Weaving.

SRI P. G. MANICKAM: பிச்சைக்காரர்கள் தொல்லை பஸ் ஸ்டாண்டிலும் ரயில்வே நிலையங்களிலும் அதிகமாக இருப்பது பற்றி ஒரு சில நாட்களுக்கு முன்பு நான் ஒரு கேள்வி கேட்ட போது, அமைச்சர் அவர்கள், "கவனிக்கப்படும்; சட்டம் திருத்தி ஒழுங்கு செய்யப்படும்" என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தை பஸ் ஸ்டாண்டு, ரயில்வே நிலையங்கள் இவைகளுக்கும் பொருந்தும்படி திருத்த அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்பொழுது அமுலில் இருக்கும் சட்டத்தைத் திருத்துவது பற்றி அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

---

[a] Printed as Appendix II on page 402 infra.

22nd August 1960]

SRI T. S. RAMASWAMY: கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இதுபற்றி அரசாங்கத்திலிருந்து என்ன சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நாகர்கோயிலில் ஒரு "பெக்கர் ஹோம்" வைப்பதாக யோசனை இருக்கிறது.

SRI T. T. DANIEL: May I know whether there is a proposal to extend the Madras Prevention of Begging Act, 1945, to the transferred territory?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, all good pieces of legislation will be extended to Kanyakumari.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that beggars suffering from communicable diseases are still found in the public places? Will the Government at least take steps to isolate these persons suffering from communicable diseases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Government have been looking into this matter.

SRI S. RANGANATHA MUDALIYAR: Will the Government extend the provisions of this Act to Tiruttani and Sholingur towns?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no question of extending this Act. The Act applies to those places and action is being taken to round up beggars and take them to the Beggar Home in Kancheepuram, which has been recently started.

SRI A. VEDARATHNAM: குழந்தைகளையாவது பிச்சை யெடுப்பதினின்றும் காப்பாற்றி, அனாதை இல்லங்கள் போன்ற இடங்களுக்கு அனுப்பி, அங்கு அவர்கள் கல்வி பெறுவதற்கான வழி செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதற்காக "பாய்ஸ் ஹோம்" என்று சில ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பல நகரங்களிலும். சென்னை நகரத்திலும் அம்மாகிரி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM: ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப் பட்டிருக்கிறதா? அப்படியில்லையென்றால், அந்தந்த ஜில்லாக் கலெக்டர்களுக்குச் சொல்லி, பிச்சைக்காரர்களின் கணக்கை எடுத்து, அவர்களை வேலையில் அமர்த்துவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர் களைப் பிடித்து அவர்களுக்கு வேலை கற்றுக் கொடுப்பதற்கும், வயோதிகர்கள், வேலை செய்ய இயலாதவர் போன்றவர்களுக்கும்

தனித்தனியாக "ஹோம்" வைத்து நடத்தப்படுகிறது. மொத்தம் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது இப்பொழுது கணக்கெடுக்கவில்லை.

SRI S. M. ANNAMALAI: பிச்சைக்காரர்கள் அதிகமாவதற்குக் காரணமென்ன? அந்தக் காரணத்தைச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர்கள் அதிகம் ஆவதற்கு வறுமை மட்டும் காரணமல்ல என்று சர்க்காருக்குத் தெரியும்.

SRI V. SUBBIAH: இந்தவிதப் பிச்சைக்காரர்களில் நோயுற்றவர்கள், குஷ்ட ரோகம் போன்ற வியாதியுடையவர்கள், அங்கஹீனர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று தனிக் காலனி அமைத்து அவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்க ஏதாவது அரசாங்கத்திற்கு திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர்கள் நிவாரணத்தைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது இந்த வேலையும் அரசாங்கத்தின் பிரத்தியேகமான பரிசீலனையில் இருக்கிறது. நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

Land erosion

*272 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தாளவாடி மலைப் பிரதேசத்திலே மண் அரிப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

(ஆ) அவ்விடத்தில் எத்தனை ஏக்கரா நிலங்கள் மண் அரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன?

(இ) 1960–61-ம் வருடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மூலமாக எத்தனை ஏக்கரா நிலங்களிலே மண் அரிப்புத் திட்டம் அமுலாக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Nil, for the year 1960–61.

(*b*) Not available.

(*c*) Nil, Sir.

Water-diviners

*277 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீரூற்றுகளைக் கண்டுபிடித்து விவசாயத்துக்கான கிணறுகளைத் தோண்டுவதற்காக அரசாங்க மூலமாக "நீரூற்றுக் கண்டுபிடிக்கும் நிபுணர்கள்" நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

22nd August 1960]

(ஆ) அப்படியானல் யார் யார் ?

(இ) இவர்கள் இதுவரைக்கும் எத்தனை இடங்களில் நீரூற்றுகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir. However, in connection with evolving a scheme for the sinking of open wells in this State for irrigation purposes, the Collector of South Arcot has utilized the services of a water-diviner.

(b) Sri P. S. Kuppuswami of Madras.

(c) Twenty sites in seven villages of Tirukoilur taluk and 20 sites in 15 villages in Vridhachalam taluk have been selected by the water-diviner. It is reported that no wells have been sunk, and that no springs have been discovered.

SRI P. G. MANICKAM: மேற்கொண்டு நீர் ஊற்று இருப்பதைக் கண்டுபிடிப்பது பற்றியும், வல்லுநர்களால் நடைபெறும் சங்கதிகளைப் பற்றியும் பிளாக் டெவலப்மென்ட் கமிட்டிகள் மூலமாக விவசாயிகளுக்குத் தெரிவிப்பது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தண்ணீர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கக்கூடியவர்கள் சில பேர் இருக்கிறார்கள். அவர்கள் இந்த வட்டாரங்களில் நியமிக்கப் பட்டு வருகிறார்கள்.

அதற்கு மேலே, அங்கு வட்டார வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் விவரங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்றால் வட்டார வளர்ச்சி அதிகாரி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

SRI N. MAHALINGAM: கிழக்கு சமுத்திரக் கரையோரங்களில் "ஸாண்டு ஸ்டோன்" இருக்கும் பிரதேசங்களிலெல்லாம் ஆர்ட்டீஷியன் கிணறுகள் வெட்டித் தண்ணீர் கொண்டுவர முடியும் என்று நிபுணர்கள் கருதுவது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அப்படியானல், அதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆர்ட்டீஷியன் ஊற்றுகள் எங்கெங்கு இருக்கின்றன என்று அவ்வப்போது பரிசீலனை செய்யப்படுகிறது. எங்கெங்கு சாத்தியப்படுகிறதோ அங்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

SRI N. MAHALINGAM: ஆர்ட்டீஷியன் நீர் ஊற்றுகள் திருச்சி ஜில்லாவிலும், தஞ்சை ஜில்லாவில் பட்டுக்கோட்டை தாலூகாவிலும் இருப்பதாக நிபுணர்கள் கருதுவதால் அதைப் பற்றித் தீவிர விசாரணை செய்ய ஒரு குழுவை அரசாங்கம் நியமிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

[22nd August 1960

Forest Officers' Conference

*279 Q.—Sri P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு மே மீ 3உ கோயமுத்தூரில் நடை பெற்ற சென்னை ராஜ்ய காட்டிலாகா அதிகாரிகளின் மூன்றாவது வருஷாந்திர மகாநாட்டிலே என்னென்ன திட்டங்களை அமுலாக்க தீர்மானிக்கப்பட்டன ?

(ஆ) இம் மகாநாட்டிலே கலந்தாலோசிக்கப்பட்ட விஷயங்களடங்கிய ஜாபிதா ஒன்று அசெம்பிளி மேஜையின் மீது வைக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*). A statement [a] is placed on the Table of the House.

Sri P. G. MANICKAM: இதர இலாகாக்களில் நியமிக்கப்படும் எல்லாவித அட்வைசரி கமிட்டிகளிலும் அங்கம் வகிக்கிறவர்களுக்கும் பிரயாணப்படி வழங்கப்படுகிறது. ஆனால் காட்டிலாகா அட்வைசரி கமிட்டியிலே உள்ளவர்களுக்கு மட்டும் பிரயாணப்படி வழங்கப்படுவதில்லை. இதுபற்றி சர்க்கார் கவனம் செலுத்தி அவர்களுக்கும் பிரயாணப்படி வழங்கப் படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: எல்லா ஆலோசனைக் கமிட்டிகளுக்கும் பிரயாணப்படி வழங்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டத்தில் இல்லை.

Sri S. M. ANNAMALAI: மேஜை மீது வைக்கப் பட்டிருக்கும் அறிக்கையின் 13-வது பக்கத்தில், பஸ் ரூட் இல்லாத இடங்களிலும் பள்ளிக்கூடம் இல்லாத இடங்களிலும், ஜவ்வாது மலைப் பகுதியிலும் இருப்பவர்களுக்கு "ஹில் அலவன்ஸ்" கொடுக்க வேண்டுமென்று அந்த மாநாட்டில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அதைக் குறித்து இந்தச் சர்க்கார் இதுவரை எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கலாம்.

Sri K. VINAYAKAM: On a point of Order, Sir. It is parliamentary convention that whenever the House is sitting the Treasury Benches must be occupied by all Cabinet Ministers, or at least by one Minister and in the same way the Opposition Benches also should be occupied at least by one Member of the Opposition. For the past three days I find the front Opposition Bench has not been occupied by such of those who should come and occupy them. Even the Hon. Leader of the House has made gestures to those who are coming indicating that the front Opposition Bench should not be kept vacant. Are we functioning in this House without any Opposition?

[a] Printed as Appendix III on pages 402-414 infra.

22nd August 1960]

MR. SPEAKER: The hon. Member's presumption so far as the Treasury Bench is concerned is correct. So far as the Opposition Bench is concerned, it is not so and it is only a suggestion. I hope the Opposition leaders will listen to the suggestion of the hon. Member. As time passes, the Opposition Bench gets filled up.

Sub-Magistrates

*356 Q.—SRI S. M. ANNAMALAI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சப்மாஜிஸ்ட்ரேட்டுகளை கெஜட் பதிவுள்ள உத்தியோகஸ்தர்களாக மாற்ற உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI S. M. ANNAMALAI: ஒரே படிப்பு உள்ள ஜில்லா முன்சீப்களை நியமிக்கிறபொழுது அவர்களுக்கு மட்டும் கெஜட் பதவி கொடுத்துவிட்டு, சப்-மாஜிஸ்டிரேட்களுக்கு மட்டும் கெஜட் பதவி கொடுக்கப்படவில்லை. அம்மாதிரி செய்வது பொருத்தமா ? அதைச் சர்க்கார் மறுபரிசீலனை செய்து சப்-மாஜிஸ்டிரேட்டுகளையும் கெஜட் பதிவுள்ள உத்தியோகஸ்தர்களாக மாற்ற உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதே படிப்பு உள்ளவர்கள் ஹைகோர்ட் நீதிபதிகளாகக் கூட நியமிக்கப்படுகிறார்கள்.

Selection of students for Agricultural College

*357 Q.—SRI T. S. RAMASWAMY (on behalf of SRI P. S. CHINNADURAI): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயக் கல்லூரிக்கான மாணவர் தேர்தலில் விவசாயிகளின் பிள்ளைகளுக்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அப்படியானல் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Although no seats are reserved for sons of agriculturists, preference is given, other things being equal, in the matter of selection of candidates for admission to the Agricultural College, Coimbatore to:

(a) Persons who own lands themselves or whose parents or guardians own lands;

(b) persons, who are sons of cultivators; and

(c) persons who have practical experience in agriculture.

Vacancies arising on account of selected candidates not turning up are filled up at the discretion of the Dean, Agricultural College and Research Institute, Coimbatore, by candidates who are

[22nd August 1960

sons of persons engaged in agriculture and are keen on joining the Agricultural College, irrespective of considerations of merit, native district, community, etc.; candidates who are not sons of persons engaged in agriculture are admitted only in case the required number of sons of persons engaged in agriculture are not readily available.

SRI N. MAHALINGAM: இந்த வருஷம் விவசாயக் கல்லூரியில் சேருவதற்கு நிறைய மாணவர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்ததால், மற்றும் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பது பற்றி அரசாங்கம் சிந்திக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மற்ரெரு விவசாயக் கல்லூரி அமைப்பது பற்றி மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED: May I know, Sir, the number of seats reserved for the students of other States.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would like to have notice.

Grape cultivation

* 358 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தாளவாடி மலைப் பிரதேசத்தில் எத்தனை ஏகரா நிலத்தில் திராட்சைப் பழ உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது ?

(ஆ) இப் பிரதேசத்தில் திராட்சைப் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பரிசீலனை நடைபெற்று வரின், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Only about 30 cents of land and that too in the backyards of houses is under grape cultivation. Grape is not grown in acre scale anywhere in the Talavadi firka.

(*b*) There is no special proposal to increase the area under grapes in this firka.

SRI P. G. MANICKAM: தாளவாடிப் பிரதேசமானது மழைப் பிரதேசமாகும். அங்கு கிராகைஷப்பழ உற்பத்திக் குரிய வசதிகள் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகையினுல் மீண்டும் பரிசீலனை செய்து அங்கு அதிகமான ஏகராவில் திராகைஷப் பழம் உற்பத்தி செய்வதுபற்றி சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஓரளவு அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது, கோபிசெட்டிப் பாளையம் தாலுகாவில். ஆனுல் எங்கு அதிகமாக விளையக்கூடிய மண் வளம் இருக்கிறதோ, அங்கே விசேஷ கவனம் செலுத்தப் படும்.

Anicut across Noyyal river

* 359 Q.—SRI T. S. RAMASWAMY (on behalf of SRI K. R. NALLASIVAM): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஈரோடு தாலூகா அஞ்சூருக்கு அருகில் நொய்யலில் அணை கட்டுவது பற்றிய பரிசீலனை முடிந்துவிட்டதா ?

(ஆ) இதன் மூலம் பலன் பெறும் நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு ?

(இ) அணைத் தேக்கப் பகுதியில் மூழ்கும் நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN: (a) No, Sir. It is in progress.

(b) 21,000 acres of wet crop.

(c) 1,998 acres.

Utilization of wind powers

* 360 Q.—SRI N. K. PALANISAMI: Will the HON. the Minister for Home be pleased to state—

(a) Whether any experiments have been conducted for the utilization of wind power; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) No, Sir. But proposals for conducting experiments for the utilization of wind power for irrigation purposes are under consideration of the Government. They include the establishment of wind observing stations at Tondi, Kilakarai, Pambur and Kamudhi in Ramanathapuram district for the purpose of selecting suitable sites for the installation of wind mills.

SRI N. K. PALANISAMI: May I know, Sir, whether the experiments so far conducted are successful?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. The experiments so far conducted are not disappointing.

Cases against taxi drivers

* 361 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) Whether the leaders of the taxi drivers have approached the Government for the withdrawal of pending cases against the drivers; and

(b) if so, the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Secretary, Tamil Nad Taxi Drivers' Union, communicated to Government resolutions passed on 19th May 1960 at its General Body meeting.

The meeting resolved that till all cases pending against Taxi Drivers in respect of the incident of 26th February 1960 near Wellington Talkies are withdrawn, the strike should be continued, and the Union should take steps for the release of all those Taxi Drivers who had gone to Jail.

(b) No action was taken, as the communication was not in the form of a petition to Government stating the grounds and circumstances of the case and as the strike had ended.

SRI A. A. RASHEED : May I know, Sir, the number of taxi drivers who were prosecuted and convicted in the courts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am sorry, I don't have that information with me.

SRI N. MAHALINGAM : பொது மக்களிடம் சென்னையில் டாக்ஸி டிரைவர்கள் சரியான முறையில் நடந்து கொள்வது இல்லை என்பது பற்றி அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா? அம்மாதிரி டாக்ஸி டிரைவர்கள் சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில டாக்ஸி டிரைவர்கள் பற்றி அம்மாதிரி புகார்களும் உண்டு. இதையெல்லாம் கவனித்துத்தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள்.

Co-operative societies for the maintenance of dry cows

* 362 *Q.*—SRI S. M. ANNAMALAI : (on behalf of Sri M. P. SARATHI) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) பால் வற்றிய மாடுகளின் பராமரிப்புக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) 1959–60-ல் அவைகளுக்குக் கடன்கள், மான்யங்கள் முறையே எவ்வளவு வழங்கப்பட்டுள்ளன ?

(இ) இந்தச் சங்கங்களை மேற்பார்வையிடும் அலுவலரில் (Inspectors) யாருக்காவது கால்நடை மருத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Six Salvage Farms established for the Salvage of dry cattle are in existence and they are managed by the Co-operative Milk Supply Unions and Societies.

(b) A total subsidy of Rs. 21,326·50 nP. and a loan of Rs. 9,000 have been sanctioned by the Government during 1959-60 for the salvage farms.

(c) No, Sir.

22nd August 1960]

SRI S. M. ANNAMALAI : இம்மாதிரிப் பண்ணைகள் 6 இடங்களில் இருப்பதாகச் சொன்னார்கள். எங்கெங்கே என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நாலு " பாரம்கள் " திருநெல்வேலி ஜில்லாவில் அபிஷேகப்பட்டியிலும், திருச்சிராப் பள்ளி ஜில்லாவில் துவக்குடியிலும், கோயமுத்தூர் ஜில்லாவில் வீரபாண்டியிலும், ராமநாதபுரம் ஜில்லாவில் விருதுநகரிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இரண்டு பண்ணைகளைப் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI V. SUBBIAH: கோவில்பட்டி தாலுகா ஒட்டப் பிடாரம் என்னும் இடத்தில் அம்மாதிரிப் பண்ணை இருக்கிறதா? அது என்ன நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

SRI S. M. ANNAMALAI: மற்ற இரண்டு பண்ணைகளைப் பற்றித் தகவல் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு பண்ணைகளைப் பற்றி தகவல் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த இரண்டு பண்ணைகளை வேறு எங்காகிலும் ஆரம்பிப்பதற்குச் சர்க்கார் உத்தேசிப்பார்களா ? அல்லது அவைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சர்க்காரிலே பண்ணைகள் நடத்துகிறார்கள். அதுமாதிரிப் பண்ணை சென்னை நகரத்திற்கு அண்மையில் ஒரு இடத்தில் நடத்தப்படுகிறது. என்னிடம் மூலக் கேள்விகளைப்பற்றிய தகவல் இருந்தனவே தவிர மற்ற தகவல்கள் இல்லை என்றுதான் சொன்னேனே தவிர இது பற்றி ஒன்றும் அரசாங்கத்திற்குத் தெரியாது என்று அர்த்தமல்ல.

Murders in Tiruvannamalai and Chengam taluks

* 363 Q.—SRI S. M. ANNAMALAI : (on behalf of Sri P. U. SHANMUGAM): கனம் உள்விவகார அமைச்சரவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணமலை, செங்கம் தாலூகாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை கொலைகள் நடைபெற்றன ?

(ஆ) அவைகளில் எத்தனை இன்னும் துப்பு துலக்கப் படாமல் இருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 10 in 1957; 8 in 1958; 6 in 1959; and 3 in 1960 up to date.

(b) 2 in 1957 and 2 in 1959.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that murders in North Arcot district have been on the increase in recent years? If so may I know the reason, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may draw his own conclusion. I have just furnished the particulars about it.

[22nd August 1960

SRI S. M. ANNAMALAI: துப்பு துலக்கப்படுவது மிகவும் குறைவாக இருக்கிறதே? துப்பு துலக்குவதற்கு இங்கிருந்து ஏதாகிலும் போலீஸ் நாய்கள் அழைத்துச் செல்லப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: துப்புக் கண்டு பிடிப்பது என்பது ஒன்றும் குறைவாக இருப்பதாக நான் ஒப்புக்கொள்ளவில்லை.

Kandamanur-Varushnad road

* 364 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் மதுரை ஜில்லாவில் ஆதிவாசிகள் நலனுக்காக எத்தனை ரோடுகள் போட திட்டமிடப்பட்டன?

(ஆ) அதில் எத்தனை ரோடுகள் போடப்பட்டன?

(இ) மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா கண்டமனூரிலிருந்து, வருஷநாடுவரை ரோடு போடத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருந்தும் அந்த வேலை நடக்காத காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Only Village Communications intended to serve villages are sanctioned and are under execution. No specific road scheme has been sanctioned for the benefit of aboriginals in Madurai district.

(*b*) Does not arise.

(*c*) There is no such proposal in the Second Five-Year Plan.

SRI V. SUBBIAH: இந்த ரோடாவது மிக வளம் பொருந்திய மணல் வளம் உள்ள வருஷநாடு மலைப் பிரதேசத்தையும் ராமநாதபுரம் ஜில்லா உத்தராயிருப்பையும் இணைக்கக்கூடியதாக இருக்கும் ரோடாகையால், அதை அம்மாதிரி இணைப்பதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அது பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

Inscriptions discovered in Panmozhi firka

* 365 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா பன்மொழி பிர்க்கா, குத்துக்கால் வலசை கிராமத்தில் சமீபத்தில் புராதன கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டதா?

(ஆ) கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணர்கள் அதைப்பற்றிக் கூறும் விவரமென்ன?

22nd August 1960]

(இ) அக் கல்வெட்டுகளை அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) No expert opinion has so far been obtained.

(c) The matter has been remitted to the Government Epigraphist for India, Ootacamund, for necessary action.

SRI A. VEDARATHNAM: எவ்வளவு நாட்களில் அந்த ஆராய்ச்சியாளர்களிடமிருந்து பதிலை எதிர்பார்க்கலாம் ? அந்த இடத்தில் மேலும் பரிசோதனை செய்து மேலும் புதை பொருள்கள் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதற்கு மேல் இருக்கிறதா என்பதைப் பற்றித் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. எவ்வளவு சீக்கிரம் அந்தப் பொருள் கிடைக்கும் என்று என்றால் இப்பொழுது சொல்ல முடியாது.

Kadaladi Handloom Weavers' Co-operative Society

* 366 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் தாலூகா கடலாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி 10—8—1957-ல் பொது மக்களால் புகார் அனுப்பப்பட்டதா ?

(ஆ) அப்படியானால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The Deputy Registrar of Co-operative Societies, Vellore (South), enquired into the matter and found that the allegations were not substantiated and were without basis.

SRI S. M. ANNAMALAI: அந்த ரிப்போர்ட் 10—8—1957 அனுப்பப்பட்டு, ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் கழித்து இப்பொழுதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த சொசைட்டி ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக சரிவர நடைபெறாமல் இருக்கிறது. அது சரிவர நடக்க இது வரையில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government are taking action to revive the society. Allegations were made on 10th August 1957. Most of them were very frivolous and without any basis. It takes some time to collect all the material and then come to a conclusion.

SRI S. M. ANNAMALAI: இப்படிப் பல புகார்கள் அனுப்பினாலும் அதைப்பற்றி விசாரிக்க "டிபுடி ரிஜிஸ்ட்ரார்" வருவதற்கு ஏறத்தாழ இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன.

[22nd August 1960

உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டால் அந்த சொசைட்டி சரிவர நடக்கும். அப்படி உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதால்தான் பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. விசாரணைக்கு வருவதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றபடியால்தான் அந்த சொசைடி சரிவர நடைபெறவில்லை. அதன் காரணமாக உடனடியாக அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: உண்மையான புகார்களாக இருந்தால் அவற்றை சுலபமாக விசாரிக்கலாம். ஆதாரமற்ற புகார்களை அனுப்பினால் அதைப்பற்றி விசாரிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது. அந்த சொசைட்டி மீது அனுப்பப்பட்ட புகார்கள் எல்லாம் ஆதாரமற்றவைகளாக இருக்கின்றன. அதனால் அவைகளைப்பற்றி விசாரிக்க காலதாமதமாகிறது. ஆதாரம் இருக்கிறதா என்று தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால்தான் அந்த சொசைட்டி சம்பந்தமான புகார்களுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிறது.

Potato cultivation

* 367 *Q*.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிச்செட்டிப்பாளையம் தாலுகா, தாளவாடி மலைப்பிரதேசத்தில் உருளைக் கிழங்கு உற்பத்திக்கான திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானால் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM: உருளைக் கிழங்கு உற்பத்திக்கு மண் வளம் சீதோஷ்ண ஸ்திதி முதலியவைகள் நீலகிரி ஜில்லாவில் இருப்பது போன்றுதான் தாளவாடி மலைப் பிரதேசத்தில் இருக்கிறது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அங்கு உருளைக் கிழங்கு உற்பத்திக்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உருளைக்கிழங்கு உற்பத்திக்கு மண் வளம் மட்டும் போதாது. காட்டு மிருகங்கள் உபத்ரவம் இல்லாமல் இருக்க வேண்டும். மண் அரிப்புக்கு இடம் இருக்கக்கூடாது. அம்மாதிரி இல்லாத பிரதேசங்களைப் பார்த்துத்தான் உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு எவ்வளவு சாத்தியம் என்று பார்த்து அங்கே பயிரிடப்படுகிறது. அது விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

22nd August 1960]

SRI A. VEDARATHNAM: சமவெளி பிரதேசங்களில் உருளைக்கிழங்கை சாகுபடி செய்வதற்கு, அதாவது ஓரத்தநாடு போன்ற இடங்களில் இம்மாதிரி சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்க முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Works for the drought affected people of Erode taluk

* 368 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received any representations from the people of Erode taluk on 10th June 1960 regarding the formation of pond works, laying of roads and provision of works for the drought affected people of Erode taluk and if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir.

SRI N. K. PALANISAMI: Sir, since all the wells in those areas have dried up and there is a continuous famine for the past 16 years, will the Government sympathetically consider the matter and take steps to deepen all the wells and repair some fishing ponds in that area?

THE HON. SRI M. A. MANICKAVELU: Steps have already been taken. Last year a sum of Rs. 2,27,000 was allotted and a major portion of it was spent. This year also they have asked for Rs. 2 lakhs and the matter is being looked into.

SRI N. K. PALANISAMI: Sir, my question has not been answered. My question is, what measures the Government have taken to prevent the recurrence of famine?

THE HON. SRI M. A. MANICKAVELU: Preventive measures cannot be taken by any human agency in regard to this matter. God should be merciful and give us rains.

Hundred-rupee notes

* 369 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have recommended to the Union Government for the demonstration of hundred-rupee notes?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that even genuine notes are exchanged at below par and at discount and if so, what steps the Government have taken to remove this scare of circulation of forged notes?

THE HON. SRI C. SUBRAMANIAM: I hope the hon. Member does not wish to raise a scare on this. I will be making a statement on the matter shortly.

[22nd August 1960

SRI K. ANBAZHAGAN: இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலே காரணமாக எல்லா 100 ரூபாய் நோட்டுகளேயும் அரசாங்கம் திரும்பப் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நோட்டுகளே மட்டும் போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதைப்பற்றி ரிசர்வ் பாங்கு கவனித்து செய்ய வேண்டியதை செய்து கொண்டு வருகிறது. அதைப்பற்றி அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி பின்னுல் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

SRI J. MATHA GOWDER: எந்த எந்த நோட்டுக்கள் கள்ள நோட்டுகள் என்று தெரியாமல் எல்லா நோட்டுகளேயும் கொண்டுபோய் கொடுக்க மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே திட்டவட்டமாக இந்த இந்த எண்ணிக்கையுள்ள நோட்டுகள் தான் கள்ள நோட்டுகள் என்பதைப் பற்றிய அறிக்கையை அரசாங்கம் வெளியிட முயற்சிக்குமா ?

THE HON. C. SUBRAMANIAM: கள்ள நோட்டுகள் என்ன என்பதற்கு அவற்றில் முத்திரை போட்டால்தான் தெரியும். என்னென்ன சாத்தியமோ அவையெல்லாவற்றையும் ரிசர்வ் பாங்கு செய்து கொண்டு தானிருக்கிறது. அதைப்பற்றி பின்னுல் அறிக்கை விடப்போகிறேன்.

MR. SPEAKER: கனம் அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மெண்டை கொடுக்கப் போகிறார் கூடிய சீக்கிரத்தில். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

Single Finger-Print system

*370 Q.—SRI M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் தனிவிரல் பதிவு முறை (Single Finger-Print System) எந்த எந்த நகரங்களில் காவல் துறையினர் குற்ற ஆய்வுக்குப் பயன்படுத்துகின்றனர் ?

(ஆ) இந்த நவீன முறை எல்லா முக்கிய நகரங்களிலும் குறிப்பாக திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் எப்போது ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Single Digit System of Finger-Print is in force in the following two places:—

(1) Madras City since 15—6—1956.

(2) Madurai district since 16—5—1960.

(b) The question of extension of the Single Digit System of Finger-Print to other important towns will be considered after, and in the light of, the experience gained in the working of the system introduced in the Madurai district from 16th May 1960.

22nd August 1960]

SRI S. M. ANNAMALAI: இது வரையில் அந்தத் திட்டத்தினுல் நல்ல பலன் ஏற்படுகிறது என்று சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மேலும் அந்தத் திட்டத்தை ஏன் விஸ்தரிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதை விஸ்தரிப்பதற்கு இடம், அந்த பிராந்தியத்தினுடைய தகுதி இவை வேண்டியதாக இருக்கிறது.

New Bus-stand for Cumbum

*371 Q.—SRIMATHI A. S. PONNAMMAL (on behalf of Sri N. R. THIAGARAJAN): கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா கம்பம் பஸ் ஸ்டாண்ட் எடுக்கப்பட்டு எத்தனை வருடம் ஆகிறது?

(அ) புது பஸ் ஸ்டாண்ட் அமைப்பதில் உள்ள கால தாமதத்திற்குக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (a) The bus-stand at Cumbum was closed on 4th September 1955.

(b) It is reported that the site proposed for the construction of the new bus-stand belongs to Sri Kambaraya Perumal Devasthanam and as such the Commissioner for Hindu Religious and Charitable Endowments has been approached for sanction and his orders in the matter are awaited.

SRIMATHI A. S. PONNAMMAL: அங்கே பஸ் ஸ்டாண்ட் அமைப்பதற்கு அந்த தேவஸ்தானத்தை இந்த அரசாங்கம் கேட்டதற்கு அவர்கள் கொடுக்காமல் இருந்ததற்குக் காரணம் என்ன?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: 1957-ம் ஆண்டு கமிஷனரைக் கேட்டதற்கு 11—8—1958-ல் 15 வருஷங்களுக்கு மட்டும் தான் அந்த இடத்தை லீசுக்கு விட முடியும் என்று கோரி இருந்தார்கள். அந்த லீசும் அந்த 15 வருஷத்திற்குத் தான். வாடகை 100 ரூபாய் கொடுக்க வேண்டியதாக இருந்தது. அத்துடன் கட்டிடம் வேறு கட்ட வேண்டியதாக இருந்தது. அப்படி அமைத்து அதை உபயோகிப்பதாக இருந்தால் அது லாபகரமாக இருக்காது என்று கருதி 50, 60 வருஷ லீசில் விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

Tamarind

*372 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்துக்கு எத்தனை டன் புளி இறக்குமதி செய்யப்படுகிறது?

(ஆ) நம் ராஜ்யத்தில் புளி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) About 24,300 tons (in 1959–60). This is only a rough estimate.

(*b*) Steps are being taken to plant more tamarind trees and also to protect the existing trees.

SRI P. G. MANICKAM : ரோடு ஓரங்களின் இரு புறங்களிலும் புளிய மரங்களை வைத்துப் பயிரிட வேண்டும் என்று சொல்லி அந்த விஷயத்தில் சம்பந்தப்பட்ட இலாகா இதற்கு முன் மிகவும், கவனம் செலுத்தி வந்தார்கள். தற்போது அவ்வாறு கவனம் செலுத்தப்படுவது இல்லை. அவ்வாறு கவனம் செலுத்தும்படியாக, அதாவது ரோடு ஓரங்களில் இரு புறமும் புளிய மரங்களை வைத்துப் பயிரிடுவதற்கு அதிகப்படியான கவனம் செலுத்தும்படி அரசாங்கம் சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புளிய மர நிழல் அதிக உஷ்ணம் என்று கருதி அதை நிறுத்தி விட்டார்கள். இப்பொழுது புளி பற்றுக்குறை இருப்பதால் அதைப்பற்றி கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்களிடம் சொல்லி, ஹைவேஸ்களில் அதை வளர்க்க அதிகப்படியான கவனம் செலுத்தும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இனிமேல் புளிய மரங்களை வைப்பதாக உத்தேசம்.

SRI K. VINAYAKAM : Sir, in view of the increase in the price of tamarind and great scarcity felt in the supply of tamarind—we have been forced to import it from the Andhra Pradesh—will the Government be pleased to take steps to place a ban on the indiscriminate cutting of the fruit-yielding tamarind trees unless they are found to be sterile?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is, of course, a ban not only against the cutting of fruit-yielding tamarind trees but also against the cutting of other trees.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, புளிய மரங்
9-00 a.m. களில் பல்வேறு வகைகள் இருப்பதனால், சில மரங்கள் சில இடங்களில் நன்றாக வளருகின்றன ; சில மரங்கள் சில இடங்களில் நன்றாக வளருவதில்லை. எந்தெந்த இடங்களில் எவையெவை வளரும் என்ற ஆராய்ச்சி நடந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காட்டு இலாகாவினர் ஆராய்ச்சி செய்து, தகுதியுள்ள இடங்களில்தான் செடிகளை நடுகிறார்கள்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : புளிப் பற்றுக்குறை இந்த மாநிலத்தில் இருக்கும்போது, புளிய மரங்களை காளவாய்க்கும் மற்ற காரியங்களுக்கும் வெட்டுவதை நிறுத்தி, உரிய புறம்போக்கு நிலங்களில் புளிய மரங்கள் பயிரிட விவசாயிகளுக்கு அனுமதி அளிப்பார்களா?

22nd August 1960]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : புளிய மரம் மாத்திரமல்ல, எந்த மரத்தையும் வெட்டக் கூடாது என்று உத்தரவு இருக்கிறது. மரங்களை விருத்தி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தனி நபர்கள் செடிகள் நட்டுப் பயிரிட முன்வந்தால், அவர்களுக்கும் ஆதரவு அளிக்கப்படும்.

Sri N. MAHALINGAM: சாலை ஓர மரங்கள் சம்பந்தமாக ஆராயும்படி ஒரு கமிட்டி சர்க்காரால் நியமிக்கப்பட்டதா ? அவர்கள் சிபாரிசுகளை அமுலுக்குக் கொண்டுவர ஏன் தாமதம் ஆகிறது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சாலை ஓரங்களில் உள்ள மரங்களைப் பாதுகாக்க, ஆங்காங்கேயுள்ள மரங்களை அந்தந்தப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

Sri K. B. S. MANI: ஸார், மரங்களை வெட்டக் கூடாது என்று உத்தரவு இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அடுப்புக் கரி அதிக விலையாக இருப்பதனால், பல மரங்கள் வெட்டப்பட்டு, கரியாக்கப்பட்டு, சென்னை போன்ற நகரங்களுக்குச் சப்ளை செய்யப்படுகின்றன. தனிப்பட்டவர்களுடையது தவிர, மற்ற பொது இடங்களில் உள்ள மரங்களை வெட்டக் கூடாது என்று ஒரு தனி உத்தரவு போடச் சர்க்கார் முயற்சிக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கெல்லாம் உத்தரவு போட்டு அமுலில் கொண்டு வருவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. கூடியவரைக்கும் மரங்களைப் பாதுகாக்க, கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri V. SUBBIAH: இப்பொழுது இருக்கும் புளி பற்றுக் குறையைப் போக்க, குறிப்பாகத் தமிழ்நாட்டில் எங்கள் பகுதியில், கடயம் போன்ற பிராந்தியங்களில், எலுமிச்சம் பழத் தோட்டங்கள் நன்றாக வளருவதால், அம்மாதிரித் தோட்டங்களை வைக்க உத்தரவு போட்டு, பற்றுக் குறையைச் சமாளிக்க சர்க்காரிடம் திட்டம் ஏதாவது உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எலுமிச்சம் பழச் சாறு உடலுக்கு நல்லதுதான் ; ஆனால், அதை எல்லோரும் உபயோகிக்க முடியாது ; அதன் விலையும் அதிகம். இருந்தாலும், எலுமிச்ச மர அபிவிருத்தியிலும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

Sri A. A. RASHEED : May I know whether these 24,000 tons were imported from other States or from abroad?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : They were imported only from other States in India.

[22nd August 1960

SRI A. VEDARATHNAM : தனி நபர்கள்புளிய மரங்கள் வளர்க்க முன் வந்தால், தக்க உதவியளிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னூர்கள் ; என்ன உதவி, எந்த வகையில் அளிப்பார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அக்கறையுள்ள தனி நபர்கள் கோரிக்கைகள் சமர்ப்பித்தால், அவர்கள் கோரிக்கை களைப் பார்த்து, வேண்டிய உதவி அளிக்கலாம்.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, புளிய மரங்கள் நடுகிறூர்கள் என்று சொன் ஞர்கள். இப்பொழுது இருக்கும் பற்றுக் குறையை அது தீர்க்குமா? வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று சொன்ன கோரிக்கையை இந்திய சர்க்கார் ஏன் ஒப்புக் கொள்ளவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறொரு ராஜ்யத் திலிருந்து ஏற்றுமதி செய்யக் கூடாது என்று இந்த அரசாங்கம் கேட்டால் போதாது. அந்த அரசாங்கமே கேட்க வேண்டும்.

SRI S. RAMASAMI NAIDU: உடல் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் புளி அவ்வளவு நல்லதல்ல என்று அரசாங்கம் பிரசாரம் செய்ய முன் வருவார்களா ? (சிரிப்பு)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு புளியும் தேவைதான். அதிகமாகச் சாப்பிட்டால், அது உடலைக் கெடுக்கும்.

Diploma holders in Civil and Rural Engineering

* 373 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government have received any petition from the Diploma holders in Civil and Rural Engineering awarded by the National Council of Rural Higher Education in connection with the recognition of their Diplomas; and

(b) if so, the details thereof.

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Chief Engineer, Public Works Department (General), the Chief Engineer (Highways) and the Director of Technical Education, who were consulted, have submitted their reports. The matter is under the consideration of the Government.

Cattle Breeding Societies

* 374 Q.—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள "கால்நடை வளர்ப்பு சங்கங்கள்" (Cattle Breeding Societies) மேற்பார்வைக்காக கூட் டுறவு இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறூர்களா?

22nd August 1960]

(ஆ) கால்நடை மருத்துவப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டு அதன்பின் நியமிக்கப்படுகின்றனரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Inspectors of the Co-operative Department appointed for the Supervision of Co-operative Cattle Breeding Societies were not given veterinary training. They have since been replaced by Stockmen of the Department of Animal Husbandry.

Sprayers

* 375 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பூச்சி நாசினி மருந்தடிக்கும் ஸ்பிரேயர்கள், மதுரை ஜில்லாவுக்கு எத்தனை சப்ளை செய்யப்பட்டன?

(ஆ) பிளாக் ஏரியாக்களில் எத்தனை விநியோகிக்கப் பட்டன?

(இ) பிளாக் அல்லாத பகுதிகளில் எங்கெங்கு கொடுக்கப் பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) to (c) A paper[a] is placed on the Table of the House.

Cultivable fallow lands

* 376 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்துக்கு லாயக்காகவுள்ள தரிசு நிலங்கள் எந்தெந்த இடங்களிலே எத்தனை ஏக்கர்கள் இருக்கின்றன என்ற விவரங்களைத் தெரிவிக்கும் ஜாபிதா ஒன்றைத் தயாரித்து, சர்க்காருக்கு அறிவிக்கும்படியாக ரெவின்யு போர்டு மூலம் ஜில்லா கலெக்டர்களுக்கு உத்திரவு அனுப்பப்பட்டதா?

(ஆ) மேற்கண்ட ஜாபிதா தயாரிக்கப்பட்டிருப்பின் அங்கத்தினர்களின் பார்வைக்கு ஒரு நகல் நூல் நிலையத்தில் வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir. The Board of Revenue has been instructed to take action to ascertain the extent out of the lands classified as "cultivable waste" and which is really cultivable and bring the area under plough as quickly as possible.

(b) A list showing the villagewise particulars of waste lands fit for cultivation is being compiled by the Board and it will be placed in the Legislative Assembly Library on receipt.

SRI P. G. MANICKAM: ஸார், சென்னை ராஜ்யத்திலே, சாகுபடிக்கு லாயக்கான, 19,79,120 ஏக்கர், தரிசு நிலங்கள் இருக்கின்றன என்று அரசாங்கத்தால் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. அவை எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? அவ்வாறு உள்ள நிலங்களை, நிலமில்லாத விவசாயிகளுக்கும், ஹரிஜனங்களுக்கும்

a Printed as Appendix IV on page 415-infra.

[22nd August 1960

பகிர்ந்து கொடுக்க நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட கலெக்டர்களுக்கு அறிவிக்கப்படவில்லையானால், இனிமேலாவது அப்படித் தெரியப் படுத்தி, பகிர்ந்து கொடுக்க சர்க்கார் கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலெக்டர்களுக்கும் இந்த விஷயமாக வேண்டிய உத்தரவுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. விவரங்களைத் தொகுத்து, அந்தத் தொகுப்பு சட்ட மன்ற நூல் நிலையத்தில் வைக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN: தரிசு நிலங்களைப் பயன் படுத்த உரிய முறையில் வசதி செய்- கொடுக்கும் வகையில், அவற்றைப் பண்படுத்திக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவரங்கள் தெரிந்த பிறகு, அந்த நிலங்களைப் பயிர் செய்ய என்ன செய்யலாம் என்று கவனிக்கப்படும். திருத்திக் கொடுக்கலாம்; ஆனால், தண்ணீர் வசதி இல்லாவிட்டால், திருத்திய பிறகு உபயோக மில்லாமல் போய்விடும். அம்மாதிரித்தான் ஆத்தூரில், சேலம் ஜில்லாவில் நாங்கள் கண்டது. ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்துப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் மாணிக்கம்.

SRI K. B. S. MANI: இந்தத் தரிசு நிலங்களைச் செவ்வனே சாகுபடி............

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் "மாணிக்கம்" என்று கூப்பிட்டேன்; கனம் அங்கத்தினர் ஸ்ரீ மணி அவர்களுக்கு அடுத்த சான்ஸ் கொடுக்கிறேன்.

SRI P. G. MANICKAM: அரசாங்கத்தால், சீலிங் மூலமாக இரண்டு லட்சம் ஏக்கராக்கள் கிடைக்கும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால், புறம்போக்கு நிலங்கள் 19 லட்சம் ஏக்கர் இருக்கிறது. இவற்றை ஏழை ஹரிஜனங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால், அவர்களது பொருளாதார வாழ்வு அதிகமாக உயரும். ஆகவே, அதைச் சர்க்கார் ஆராய்ந்து, தக்க செய்து மற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புள்ளிவிவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாது. 19 லட்சம் ஏக்கராக்களும் பயிர் செய்யக் கூடிய நிலங்கள்தான் என்றால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI K. B. S. MANI: ஸார், இம்மாதிரிப் பயிர் செய்யச் சரியான தகுதி உள்ள நிலங்களை உடனடியாக "மதராஸ் ஸேப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்" என்ற மிலிட்டரி போர்ஸை வைத்து, அவர்கள் கெட்டிக்காரர்கள் ஆனதினால், அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே விடையளித்தேன். எந்தெந்த வகையில் திருத்த முடியுமோ, அப்படிச் செய்து மற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

22nd August 1960]

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இப்பொழுது இந்தத் தரிசு நிலங்களில் சாகுபடி செய்திருக்கும் விவசாயிகளை என்ன காரணத்திற்காகவோ "எவிக்ஷன்" செய்கிறார்கள். அதிகமாக உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லும் போது, இம்மாதிரிப் புறம்போக்கு நிலங்களிலிருந்து அவர்களை "எவிக்ஷன்" செய்யாமல் இருக்க தக்க உத்தரவு போடுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சர்க்காரோ, அதிகாரிகளோ, நடவடிக்கை எடுப்பது, அந்தந்தப் பிராந்தியத்தைப் பொறுத்தது.

Sri A. GOVINDASAMY : உணவு திட்டத்தின் கீழ் உழைத்துப் பயிரிடும் ஏழை ஆதித் திராவிட மக்களுக்குச் சர்க்கார் அபராதம் போடுவதைத் தடைசெய்ய முயற்சிக்கப்படுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: ஆட்சேபகரமாக இருந்தால், அபராதம் விதிக்கப்படும்.

Cinchona plantation workers in Anamalais Hills

377 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) Whether gratuity, maistries abolition, compensation, lay of compensation and leave wages will be given to Cinchona Plantation Workers in Anamalais hills as in the case of other plantation workers; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) & (b) Leave with wages is already being given to the workers in the Cinchona Plantations on the Anamalais and the Nilgiris according to the provisions of the Plantation Labour Act, 1951, and the Rules framed thereunder as in the case of other plantation workers. The question of extending to the Cinchona Plantation Workers the other benefits such as gratuity and the maistries abolition, is under consideration of the Government. There are no cases of lay off of the workers in the Government Cinchona Plantation at present. The question of payment of lay off compensation as per the provisions of the Industrial Disputes Act, 1947 as amended is under the consideration of the Government.

Sri N. K. PALANISAMI : Since the matter is pending before the Government for a long time, may I know why the Government could not take an early decision on this matter?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Government are in consultation with the Commissioner of Labour. As soon as we receive a reply from him, action will be taken.

[22nd August 1960

SRI K. PONNIAN: மிக அருகாமையில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும், சிங்கோனு தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் வித்யாசம் 2½ அணுதான். இதில் பாதியையாவது சிங்கோனு தொழிலாளர்களுக்குக் கூட்டித் தர சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ப்ளான்டேஷன் சட்டம் இருக்கிறது. இதைப்பற்றித் தீர்ப்புகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு எல்லாவற்றுக்கும் ஏற்பத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

SRI J. MATHA GOWDER: சிங்கோனு தொழிலாளர்களுக்குச் சம்பளம் குறைவாகக் கொடுப்பதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பே சொன்னேன். தேயிலைத் தோட்டத்திற்குச் சட்டம் ஒரு மாதிரி இருக்கிறது, காப்பித் தோட்டத்திற்கு ஒரு மாதிரி இருக்கிறது. ப்ளாண்டேஷன் சட்டம் இருக்கிறது. இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டுதான் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது.

Industrial Estates for automobile ancillaries and radio parts

*378 Q.—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மோட்டார் உபதொழில்களுக்காகவும், ரேடியோ உறுப்புக்களுக்காகவும் தனித் தனியாகத் தொழில் பேட்டைகள் ஆரம்பிப்பதுபற்றி சென்னை சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN: The question of establishing Industrial Estates for automobile ancillaries and Radio Components will be considered during the Third Five Year Plan.

Sea-water distillation plant

*379 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any arrangements have been made for the installation of a sea-water distillation plant for the production of fresh water to be supplied to the Madras City; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) No. Sir.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI: Sir, is it a fact that pure water can be distilled out of sea water by distillation method, and if so, why the Government should not try to augment the water-supply of the City of Madras by this process?

22nd August 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : It has been found possible both at Israel and West Germany. But to get water on a large quantity, the cost should be bearable. Further experiment has not been completed whether to get large quantities of water by this process.

SRI K. ANBAZHAGAN: இந்த முறையில் தண்ணீர் பெறுவதற்கு என்ன செலவு ஆகிறது என்பதைப்பற்றி அரசாங்கம் வெளி நாடுகளுடன் கடிதப் போக்குவரத்து நடத்தித் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? அல்லது அந்த விவரங்களைத் தெரிந்து கொண்டு சட்ட சபைக்குத் தெரிவிப்பார்களா—

THE HON. SRI M. A. MANICKAVELU : It is only in the initial stages. I have no information about it. The two countries where it is experimented are Israel and West Germany.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether there is any arrangement for utilising the sea-water as drinking water in the Madras Port?

THE HON. SRI M. A. MANICKAVELU : I have no information.

SRI K. VINAYAKAM : Sir, would the cost of production of potable water from sea-water be commensurate with the purpose to be served, viz., augmenting the supply of drinking water to the people of Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : No. Sir. It is being experimented. Even if it is possible to convert the sea-water into drinking water, the cost should not be high.

Corruption cases

* 380 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் லஞ்சக் குற்றச் சாட்டுகளின் பேரில் எத்தனை கவர்மெண்டு அதிகாரிகளும், என்.ஜி.ஓ.-க்களும் விசாரிக்கப்பட்டார்கள்?

(ஆ) எத்தனை குற்றச்சாட்டுகள் ஊர்ஜிதப்படுத்தப் பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM :—

(1) Gazetted—24.
Non-Gazetted—102.

(2) Gazetted—2.
Non-Gazetted—54.

The above figures do not include cases in which punishments were inflicted after 1st April 1960.

Tiruppur Water-supply Scheme

* 381 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the amount allotted to Tiruppur water-supply scheme;

(b) when the scheme was started;

(c) the cost of the scheme;

(d) expenditure incurred so far;

(e) whether there is any proposal to change the reservoir from where the water is to be pumped; and

(f) the reasons for the inordinate delay in executing the scheme?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Rs. 86,52,000.

(b) June 1955.

(c) Rs. 108·45 lakhs.

(d) Rs. 72,30,779 up to May 1960.

(e) There is no change in the location of the service reservoir within the town.

(f) There has been no avoidable delay in the execution of the scheme.

SRI N. K. PALANISAMI: May I know, Sir, when the scheme will be completed?

THE HON. SRI M. A. MANICKAVELU: This is almost over. I think I cannot say exactly the time by which it will be completed. But I understand that pipe lines have been laid and everything has been done. I can only say that it will be done shortly.

SRI J. MATHA GOWDER: திருப்பூருக்குத் தண்ணீர் சப்ளை செய்வதற்கான இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏன்? இந்த கால தாமதத்தை தவிர்க்க எடுக்கப்பட்டிருக்கும் ஸ்பெஷல் முயற்சிகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: In answering the question I have stated that it will be completed by the September 1961. இதில் காலதாமதம் இல்லை. அங்கே இருந்து தண்ணீர் எடுப்பது பற்றி பிரச்னை ஏற்பட்டது. அதனல் வேலை ஒருவிதமாகவும் தடைபடவில்லை. கூனூர் ஆறு என்பதைப் பவானி ஆறு என்று மாற்றினர்கள். இதனல் வேலைக்குக் குந்தகம் ஏற்படவில்லை.

SRI N. K. PALANISAMI: May I know, Sir, whether it was proposed to take water frm Kallar and then it was changed at Mettupalayam, if so, will it not be a loss to Tiruppur Municipality reservoir?

THE HON. SRI M. A. MANICKAVELU: No, Sir. Originally we thought it was Coonoor river. It was found that it will affect the irrigation rights. It was changed to Bhavani river.

22nd August 1960]

SRI N. MAHALINGAM: இங்கு சொல்லப்படுவதற்கு மாருக திருப்பூர் திட்டம்தான் மிக வேகமாக நடந்து வருகிறதென்று பொதுமக்கள் அபிப்பிராயப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அதைத்தான் கனம் அங்கத்தினர் எல்லோருக்கும் தெரிவித்துவிட்டார்.

Approved schools

*382 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்கத்தாரால் நடத்தப்படும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்கள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) எத்தனை மாணவர்களும், மாணவிகளும் இப் பள்ளிக்கூடங்களில் தற்போது படிக்கிருர்கள்?

(இ) எதிர்காலத்திலே நல்ல பிரஜைகளாக இவர்கள் மாறுவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) There are five Approved Schools run by the State Government.

(*b*) 2,266 boys and 234 girls were studying in these five schools on 2nd July 1960.

(*c*) Children are given academic education. Vocational training is given to a large number and in a more diversified form. Occupations like Poultry-farming, Dairy-farming, Gardening, Tailoring, Weaving, Carpentry, Masonry, Blacksmithy, Book-binding, Metal work, etc., are taught to the inmates of these schools.

SRI K. ANBAZHAGAN: இந்த அப்ரூவ்டு—சீர்திருத்தப் பயிற்சிப் பள்ளியில் படிக்கிற மாணவர்கள் தனிப் பள்ளிக்கூடங் களிலும் மற்றப் பள்ளிக்கூடங்களிலும் கலந்து படிப்பதற்கு வழி முறைகள் ஏற்படுத்தப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவர்கள் இத்தனை வருடம்தான் இங்கே இருக்கவேண்டுமென்று உத்தரவு போட் டிருக்கிருர்கள். அதுவரையிலும் இங்கே இருப்பார்கள். அது முடிந்தவுடன் வெளியில் அனுப்பப்படுவார்கள்.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, the meaning of approved schools and what is meant by schools that are not approved? May I know the details?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குற்றம் செய்கின்ற மாணவர்களைத் திருத்துவது என்று அர்த்தம்.

[22nd August 1960

SRI P. G. MANICKAM: இவர்கள் எதிர் காலத்தில் நல்ல பிரஜைகளாகத் திகழவேண்டுமென்றால் இவர்களுக்கு ஆரம்பக் கல்வி தவிர உயர்தரக் கல்வி அளிக்கப்பட வேண்டும். தொழில் கல்வி அளிக்கப்பட வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் மூலக் கேள்விக்கு அளித்த விடையில் பார்த்தால் தொழில் கல்வி ஏராளமாக அளிக்கப்படுவது தெரியும். வெளியில் வந்த பிறகும் அவர்களுக்கு வசதி அளிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM: அரசாங்கம் நடத்தும் பள்ளிகள் இல்லாமல் வெளியார் நடத்தும் பள்ளிகளில் இந்த மாணவர்கள் எப்படி இருக்கிறார்கள். இந்த இரு பள்ளிகளுக்கும் வித்தியாசம் என்ன ? எதில் உள்ள மாணவர்கள் அதிகத் திறமை உடையவர்களாக இருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அரசாங்கம் நேரடியாக நடத்தும் ஸ்தாபனங்களைத் தவிர ப்ரைவேட் மேனேஜ்மெண்டு நடத்தும் பள்ளிகளிலும் இவர்கள் இருக்கிறார்கள். இதற்காகத் தனி உதவி அந்த ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்படுகிறது.

SRI A. GOVINDASAMY: இந்தப் பள்ளிகளில் பயின்று வெளியில் உயர்தர படிப்புக்குச் செல்கிறபோது அந்த மாணவர்களுக்கு விசேஷச் சலுகை கொடுக்கப்படுகிறதா ? பயிற்சி முடிந்தவுடன் உத்தியோகத்திலும் விசேஷச் சலுகை கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படி ஒன்றும் விசேஷச் சலுகை இல்லை.

Jurisdiction of Panchayat Courts

* 383 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to enlarge the jurisdiction of Panchayat Courts so as to make dispensation of justice cheaper and speedier; and

(b) if so, the detials thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) There is a proposal before Government to enhance the pecuniary jurisdiction of the Village Panchayat Courts from Rs. 50 to Rs. 200 in all cases, irrespective of the consent of both the parties to a suit.

SRI N. K PALANISAMI: Sir, most of the Panchayat Courts are not functioning properly and may I know, Sir, whether any new scheme has been evolved for effective functioning of the Panchayat Courts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government of India have appointed a Special Commission to go into the question of functioning of the Village Panchayat Courts. This Government will await their conclusion.

22nd August 1960]

SRI S. M. ANNAMALAI: பஞ்சாயத்து கோர்டுகளிலே இப்பொழுது இருக்கும் விதியின் பிரகாரம் பஞ்சாயத்து விவகாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு இல்லாமல் வேறு எந்த வகையிலே மாற்றுவதாகச் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது. மத்திய அரசாங்கம் இதைப்பற்றி விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த விசாரணை முடிந்தபின், இந்தச் சர்க்கார் முடிவு எடுக்கும்.

SRI K. VINAYAKAM: Sir, since most of the personnel who man these panchayat courts are not aware of the Civil Procedure Code and since they are not properly functioning and dispensing justice with respect to small cases entrusted to them, will the Government think of the possibility of abolishing the entire panchayat court system? What is the recommendation of the Law Commission on this matter? Also, may I know whether the Government will adopt the recommendation of the Law Commission as far as these courts are concerned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have already stated that the Government of India have appointed a Special Commission to go into the question of the functioning of the Village Panchayat Courts. So, we will await the results of that enquiry.

SRI T. SAMPATH: Is there any proposal to invest them with criminal powers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think that there is any such proposal.

MR. SPEAKER: Questions are over.

II. STATEMENT *re* NEGOTIABILITY OF HUNDRED-RUPEE CURRENCY NOTES.

MR. SPEAKER: Now the Hon. Minister for Finance will make a statement under Rule 82 of the Assembly Rules.

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, in June this year, there came to light an attempt at forgery of 100-rupee currency notes in Coimbatore district. Complaints were also received that as a result of the scare created by this discovery, there was difficulty in exchanging even genuine 100-rupee currency notes. As the matter was primarily one concerning the Reserve Bank of India, it was taken to the notice of the Governor of the Reserve Bank of India. The Reserve Bank of India issued a Press Communique on the 25th June 1960 stating that according to the information at their disposal, the forged notes have not circulated to such an extent as to cause the public any concern. They have publicised the fact that there is absolutely no reason for the public to change the genuine notes at less than par value.

[Sri C. Subramaniam] [22nd August 1960

Full facilities for exchange are available at the offices of the Reserve Bank of India and the branches of the State Bank of India, its subsidiaries and other scheduled banks and at all treasuries and sub-treasuries. This Government have also published a Press Communique incorporating this in the form of posters both in Tamil and English. The Reserve Bank of India have on their part issued instructions to officers in charge of the Branches of the State Bank, branches of scheduled banks and officers in charge of the treasuries and sub-treasuries to offer unrestircted conversion facilities to all genuine notes.

We have instructed the Police to see that no person who presents a note for conversion is harassed unless there is reason to suspect his *bona fides*. At this stage of investigation, it is not possible to issue any further instructions in the matter.

Whether it would be advisable to publish a detailed list of the forged notes has been considered. We have however been advised that just at present this will cause more harm than good.

I may also invite the attention of the hon. Members to the statement of the Hon. Finance Minister, Government of India, on 8—8—1960, that there is no reason for any alarm or panic as the forgeries constitute only a microscopic proportion of genuine notes.

I hope and trust that hon. Members will whole-heartedly co-operate with the Government in abating the alarm and in publicising the free convertibility of genuine notes.

III. PRESENTATION OF REPORTS.

(1) COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Speaker, Sir, on behalf of the Committee on Government Assurances, I present the Eighth Report of the Committee on Government Assurances.

(2) COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH : Mr. Speaker, Sir, on behalf of the Committee on Subordinate Legislation, I present the Ninth Report (Second Assembly) of the Committee on Subordinate Legislation.

IV. ANNOUNCEMENT RE. MADRAS STATE HOUSING BOARD BILL, 1960.

MR. SPEAKER : I have to announce that the Governor has given his recommendation to the introduction in, and consideration by, the Madras Legislative Assembly of the Madras State Housing Board Bill, 1960.

V. GOVERNMENT BILLS.

THE MADRAS STATE HOUSING BOARD BILL, 1960.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras State Housing Board Bill, 1960.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras State Housing Board Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced

VI. GENERAL DISCUSSION ON THE FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR THE YEAR 1960–61.

MR. SPEAKER : Now, we shall proceed with the general discussion on the First Supplementary Statement of Expenditure for the year 1960–61.

SRI J. MATHA GOWDER : கனம் சபாநாயகர் அவர்களே இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திற்குமேல் அதிகமாக ஏற்பட்டிருக்கக்கூடிய தொகைக்கு இன்றைக்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் நம்முன் இந்தக் கோரிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். இது வேறு எந்தக் காரணத்திற்காகவும் நமது சர்க்கார் கொண்டு வரவில்லை. அதிகரித்த செலவிற்கு சபையின் அங்கீகாரம் பெறுகின்ற காரணத்திற்காகத்தான் இதை சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு சம்பளக் கமிஷன் ரிபோர்ட்டின்படி நமது மாகாணத்தில் இருக்கும் கஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கிற காரணத்தால், இந்த உபமான்யக் கோரிக்கை நம்முன் வந்திருக்கிறது. சம்பள கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன் நம்முடைய மாகாணத்தின் செலவு எவ்வளவு, சம்பள கமிஷன் ரிபோர்ட் வந்த பிறகு எவ்வளவு செலவு என்று பார்க்க வேண்டும். சம்பள கமிஷன் எந்த அளவுக்குச் சிபார்சு செய்திருக்கிறதோ அந்த அளவிற்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுத்திருக்கிறது. அதனால் சர்க்காருக்கு ஒவ்வொரு வருஷத்திற்கு 7 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகிறது. இது வரவேற்கத்தக்கது. இது மாதிரியாக இந்த மாநிலத்தில் ஏற்படவில்லை. இது முதல் தடவையாக ஏற்படுகிறது.

இந்தச் சம்பள கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன்பு இந்த மாநிலத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒரே கண்ணோட்டத்தோடு அதன் விமர்சனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. கஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் அதிருப்தி அளிக்கக்கூடிய வகையிலே அறிக்கை இருந்தால் அதை வைத்துக் கொண்டு அந்த அளவுக்குச் சர்க்கார் மீது வெறுப்பை

ஏற்படுத்தப் பிரசாரம் செய்யலாம் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் அதற்கு மாறாக இது வரவேற்கக்கூடிய முறையிலே வாய்ப்பு ஏற்பட்டிருக்கிற காரணத்தால், கஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களும் திருப்தி அளிக்கக்கூடிய முறையிலே வந்திருக்கிற காரணத்தால், எதிர்கட்சியில் உள்ளவர்கள் வாயைத் திறக்க முடியாத அந்த நிலை வந்திருக்கிறது. இதைப் புரிந்து கொண்டிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்கள் கூட சம்பளக் கமிஷன் ரிபோர்ட்டை வரவேற்று பேசுவார்கள் என்று நினைக்கிறேன். அதுதான் சம தர்மம். அது தான் நீதி. அப்படியில்லாமல் சர்க்கார் பேரில் சாக்குபோக்குச் சொல்லி அரசாங்க உத்தியோகஸ்தர்களை இன்னும் மனக்கசப்பு ஏற்படும்படியாகச் செய்வது சரியல்ல. இன்றைக்கு நம் நாட்டில் இருக்கக்கூடிய நிதிநிலையில் 7 கோடி ரூபாய் அரசாங்க ஊழியர்களுக்குச் செலவிடப்படுகிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த உபமான்யக் கோரிக்கையை எல்லோரும், குறிப்பாக எதிர்க்கட்சிக்காரர்களும் சம்மதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக உபாத்தியாயர்களை எடுத்துக்கொண்டால், ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. பல முறை அவர்களுக்குச் சம்பளம் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறோம். இடையிடையே இரண்டு ஆண்டுகள் சர்க்கார் அவர்களுடைய டியர்னஸ் அல்லவன்ஸை உயர்த்தி இருக்கிறார்கள்.

9–30 a.m. இன்றுள்ள நிலை என்னவென்றால், டீ.ஏ.-யை சம்பளத்துடன் இணைத்துக் கொடுத்திருக்கிறோம். 30 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஹயர்க்ரேட் உபாத்தியாயர்களின் சம்பளத்தை இன்று 65-ஆக ஆக்கியிருப்பது வரவேற்கத் தக்கதொரு அம்சமாகும். செகண்டரி கிரேட் உபாத்தியாயர்களுக்கு, முன்பு 45 ரூபாய் அடிப்படை சம்பளமாக இருந்ததை இன்று இரண்டு மடங்காக, 90 ரூபாயாக மாற்றியிருக்கிறதும் வரவேற்கத்தக்கதொரு அம்சமாகும். டி.எ.-யையும் இணைத்துத்தான் 90 ரூபாயாக்கியிருக்கிறார்கள் என்று சொல்லக் கூடும். இதற்கு முன்பு கொடுக்கப்பட்டு வந்த டி.ஏ. எப்படியிருந்தது ? அப்பொழுது கொடுக்கப்பட்டு வந்த டி.ஏ.-யினால் பிராவிடன்ட் பண்ட் வசதி போன்றவைகளுக்கு அவை பயன்படவில்லை. இன்று அதையும் சேர்த்து அடிப்படைச் சம்பளமாக ஆக்கியிருப்பதால், பிராவிடன்ட் பண்ட் வசதி, மற்றும் ரிடையர் செய்யும் போது உத்தியோகஸ்தர்கள் அதனால் நல்ல லாபமடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆக உத்தியோகஸ்தர்கள் ரிடையர் ஆகும் போது, அவர்கள் தங்கள் வாழ்க்கையை ஓரளவு திருப்தி கரமாக கழிப்பதற்குள்ள திட்டங்களை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் ஒரு கால் இறந்து போய்விட்டால் அவர்களுடைய குடும்பத்தாருக்குப் பென்ஷன் கொடுக்கும் அளவில் திட்டம் போட்டிருப்பதைப் பார்க்கும் போது எல்லோரும் அதை

22nd August 1960] [Sri J. Matha Gowder]

வரவேற்கத்தான் வேண்டும். அடுத்தபடியாக, போலீஸ் காரர்கள் பிரச்னே. சாதாரண போலீஸ் கான்ஸ்டேபிலின் சம்பளம் மிகவும் குறைவாக இருந்தது என்று எல்லோருக்கும் ஒரு பொதுவான அபிப்பிராயம் இருந்து வருகிறது. அப்படி சம்பளக் குறைவாக இருப்பதின் காரணமாக சம்பளத்திற்கு அப்பாற்பட்ட வேலைகளை அவர்கள் செய்து கொண்டிருக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருந்தது. இன்று அவர்களுக்கு 30 ரூபாய் என்றிருந்ததை அடிப்படைச் சம்பளம் 65 ரூபாய் என்று மாற்றப்பட்டிருக்கிறது. சப்—இன்ஸ்பெக்டர் களுக்கு 80 ரூபாய் என்று இருந்ததை இப்பொழுது 140 ரூபாயாக மாற்றியிருக்கிருேம். இது போன்று எந்த டிப்பார்ட்மெண்டை எடுத்துக் கொண்டாலும் ஒரு டிபார்ட்மெண்டில் உள்ளவருக்காவது குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. ப்யூன் முதற் கொண்டு செகரட்டரி வரையில் சம்பளத்தை நாம் அதிக மாக உயர்த்தியிருக்கிருேம். இன்றைய விலைவாசி எப்படியிருக் கிறது, வாழ்க்கைச் செலவுப் புள்ளி எவ்வளவு இருக்கிறது என்ற அடிப்படையில் திருத்தச் சம்பளம், அதிகப்படியான சலுகை கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். அடுத்தபடியாக போலீஸ்காரர்களுக்கு "ஹௌஸ் ரென்ட் அலவன்ஸ்" கொடுப் பதற்குப் பதிலாக "ப்ரீ க்வார்ட்டர்ஸ்" கட்ட ஏற்பாடு செய்திருக்கிருேம் என்று அறிக்கையில் காணப்படுகிறது. அது குறித்து நான் சந்தோஷப்படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் நிறைவேறுவதற்கு முன்பாகவே 80 சத வீத போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும் பிரச்னே முடிந்துவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியே போனுல் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் நிச்சய மாக அவர்களின் வீட்டுப் பிரச்னே முடிந்துபோய்விடும் என்பது பற்றி சந்தேகிக்க வேண்டிய அவசியமேயில்லை. பின்னர் இந்த அறிக்கையில் கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி மட்டும் காண வில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை. நான் நினைக்கிறேன், கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பள உயர்வு எந்த அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும், என்பது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிருர்கள் என்று நினைக் கிறேன். அவர்களை நிரந்தர உத்தியோகஸ்தர்களாக எடுத்துக் கொள்வதா அல்லது பரம்பரைப் பாத்தியம் உள்ள பார்ட் டைம் வோர்க்கர்ஸ்சாக எடுத்துக் கொள்வதா என்பது பற்றி அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிருர்களோ என்று நினைக் கிறேன். என்னைப் பொறுத்த வரையில் ஒன்று சொல்லிக் கொள்வேன், கிராம உத்தியோகஸ்தர்களை நிரந்தர உத்தியோ கஸ்தர்களாக ஆக்குவதை விட அவர்கள் கௌரவ உத்தியோகஸ்தர்களாகவே இருந்து கொண்டு போகட்டும். ஆனுல் இன்று அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அவர்களுக்கு நிச்சயம் போதாது. அவர்களின் மன திருப்திக் காவது அவர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்படி உயர்த்திக் கொடுக்காததற்குக் காரணமென்னவென்று சர்க்கார் பரிசீலனே செய்து அடுத்த நிதி ஆண்டிலாவது

அவர்களுக்கு ஒரு வகை செய்து, அவர்களது சம்பளத்தை உயர்த்தித் தந்து வசதி செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நான் கிராம உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லும்போது மணியகாரரையும், கணக்குப்பிள்ளையும் மட்டுமல்ல. தண்டல்காரர், தலையாரி போன்றவர்களையும் குறிப்பிடுகிறேன். முன்பு தண்டல்காரருக்குள்ள வேலை என்னவென்றால் மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை கஜனாவிற்குச் சென்று கந்தாய வசூலைக் கட்டி வர அவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். சம்பளம் வாங்க அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். இன்றோ, வட்டார வளர்ச்சித் திட்டம் போன்றவைகள் வந்த பிறகு, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வேலைகள் அதிகமாகக் கொடுத்திருக்கும் போது, தண்டல்காரருக்கும் இயற்கையாகவே வேலை அதிகம் இருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஆக, இன்று அவர்கள் சப் ட்ரெஷரிக்கு மாதம் ஏழெட்டு தடவைகள் போய் வர வேண்டியிருக்கிறது. அவர்கள் தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸ்க்கு அடிக்கடி போய் வர வேண்டியிருக்கிறது. ஹெட்க்வார்ட்டர்ஸ்க்குப் போய் வருவதற்கு அவர்களுக்கு நாம் எந்த விதமான சௌகரியமும் வசதியும் இதற்காகச் செய்து கொடுக்கவில்லை. ஆகவே, இந்த தண்டல் காரர், தலையாரி போன்றவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். ஆகவே இவர்களின் அடிப்படை சம்பளத்தை இன்று அடித்தளத்தில் இருக்கிற க்ளார்க்குகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்திருந்த 30 ரூபாய் சம்பளமாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களை வைத்துக் கொண்டு, எதிர்கட்சிகள் பிரசாரம் செய்வதற்கு, ரெவின்யூ டிப்பார்ட்மென்டின் கீழுள்ள, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு எந்த விதமான சம்பளச் சலுகையும் கொடுக்கப்படவில்லை. என்று கூறி அவர்களுக்கு ஆதரவைத் தேடுவதற்கு, பிரசாரம் செய்வதற்கு எதிர்கட்சிகளுக்கு இடம் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு எந்த வகையிலும் பிரசாரம் செய்வதற்கு இடமில்லாதபடிக்கு சம்பளக் கமிஷன் அறிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். இந்த கிராம உத்தியோகஸ்தர்களின் நிலையையும் திருத்தியிருந்தால் அவர்களுக்கு எந்தவிதமான வேலையும், அதாவது பிரசாரத்திற்கே இடமில்லாமல் செய்திருக்கலாம் என்பதோடுகூட சர்க்கார் செய்திருக்கக்கூடியது சரியே என்று எதிர்கட்சியினரே ஆமோதிக்கக்கூடிய அளவில வந்திருப்பார்கள். அந்த ஒன்றை மட்டும் விட்டு வைத்திருந்தால் தேர்தலில் பிரசாரம் நடத்தலாமே தவிர என்.ஜி.ஓ.-க்களை வைத்துத் தகராறு செய்ய பே கமிஷன் அறிக்கை வந்த பிறகு அதற்குள்ள சூழ்நிலையே இல்லாமலாகிவிட்டது. சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன்பு, சம்பளக் கமிஷன் அறிக்கை வரப் போகிறது, 1960-ல் அது வரும்போது 1962-ல் வரக்கூடிய தேருதலில் அதைத் தேர்தல் பிரசாரத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால்

அவர்கள் இன்று ஏமாற்றம் அடைந்து விட்டார்கள். இது குறித்து காங்கிரஸ்காரர்கள், ஆட்சி செலுத்தக் கூடியவர்கள் இவர்கள் எல்லோரும் திருப்தி அடைந்து விட்டார்கள் என்று சொல்லவில்லை. உத்தியோகஸ்தர்கள் வாயிலாக வந்த வார்த்தைகளையே நான் கவனித்திருக்கிறேன். ஒவ்வொரு இலாகாவிலுள்ள உத்தியோகஸ்தர்களையும் விசாரித்ததில் அவர்கள் மனப் பூர்வமான திருப்தி அடைந்திருக் கிறார்கள், இந்த பே கமிஷன் ரிப்போர்டினால், இந்த திருப்தியின் அடிப்படையில் அவர்களை விட்டுவிட வேண்டும். அவர்களுக்கு மேலும் குறைகள் இருக்கின்றன என்று சொல்லி அவர்கள் மனதைக் கலைத்து, எதிர்க் கட்சியினர் தங்கள் பிரசாரத்திற் காகப் பயன்படுத்த, இப்போதைய சூழ்நிலையை மாற்றிக் கொண்டு போவது உசிதமல்ல, என்று எதிர்கட்சியினரிடம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நமது நிதிநிலை அறிக் கையை புரிந்துகொண்டு அவர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். நமக்கு ஆண்டுதோறும் எவ்வளவு வருவாய் வருகிறது, எவ்வளவு செலவாகிறது என்பதுபற்றி உத்தியோகஸ் தர்களிடம் சொல்ல வேண்டுமே தவிர மாறுபட்ட கருத்துக் களைச் சொல்லி அவர்களுக்கு அரசாங்கத்தின்பேரில் ஒருவித வெறுப்பு வரும்படி செய்யக் கூடாது. அடுத்தபடியாக வேலைப் பளு பற்றி சொல்லப்படுகிறது. அரை மணி நேர வேலை நேரத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அரை மணி நேரம் அதிகப்படி வேலை செய்கிறார்கள் என்றால் அவர்கள் யாருக்காக வேலை செய்கிறார்கள் ? நாட்டிற்காக வேலை செய்கிறார்கள். இங்குள்ள அங்கத்தினர்கள் இங்கு வந்து சொல் கிறார்கள், ஒவ்வொரு ஆபீஸிலும் எவ்வளவோ பேப்பர்கள் ரெக்கார்டுகள் தங்கிக்கிடக்கின்றன என்று. பேப்பர்கள் செட்டில் ஆவதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது என்று இங்கு வந்து குறை கூறுகிறார்கள். அதேசமயத்தில் உத்தியோ கஸ்தர்களின் வேலைப் பளு அதிகமாகிவிட்டதே, அரை மணி நேரம் அவர்கள் அதிகமாக வேலை செய்ய வேண்டியிருக் கிறதே என்றால், அப்படிக் கூடுதல் அரை மணி நேரம் வேலை செய்யும் போது வேலைகளைத் துரிதமாக தீர்க்க முடியுமல்லவா? ஒரு பக்கத்தில் வேலை குவிந்து கிடக்கிறது, கால தாமதமாகிறது என்றும் இன்னொரு பக்கத்தில் வேலைப் பளு அதிகமாகிவிட்டதே என்று சொல்லுவதும் நியாயமா என்பதை சிந்தித்து ர்தூக்கிப் பார்க்க வேண்டும். அரை மணி நேரம் வேலை நேரத்தைக் கூட்டி விட்டார்களே என்று உத்தியோகஸ்தர்கள் யாரும் சொல்ல வில்லை. அப்படியிருக்க எதிர்க் கட்சியினர் இதைக் கிளப்புவது என்பது நாட்டிற்கு நல்லதல்ல. வேலை செய்கிறவர்களை அதிக வேலை செய்ய விடாமல் செய்வது அவ்வளவு உசிதமல்ல. அதிக நேரம் வேலை செய்ய வேண்டும், அதன் மூலமாக நாம் அனைவரும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும், என்று நமது மதிப்பிற்குரிய பிரதம மந்திரி அவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தி எதிர்கட்சிக்காரர்கள் அரசாங்க உத்தியோ கஸ்தர்கள் அதிகநேரம் வேலை செய்யக் கூடாது என்று சொல்லுவது விசித்திரமாகவே இருக்கிறது . . . .

[22nd August 1960

SRI N. K. PALANISAMI: ஜாஸ்தியாகச் சம்பளம் வாங்கக் கூடிய காலத்தில் அது பொருந்தும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI J. MATHA GOWDER: கனம் திரு. பழனிசாமி சொல்லுகிற காலம் வரப்போவதே இல்லே, அது வரைக்கும் கனம் பழனிசாமி இவ்விதம் பேசிக்கொண்டே தான் இருப்பார்கள். அவர்களிடம் அதிக நேரம் வேலே செய்ய வேண்டாம் என்று சொல்லுவதற்குப் பதிலாக இந்த நாட்டிற்காக நாம் அதிக நேரம் வேலே செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். அதே போன்று தான் ஒவ்வொரு விஷயத்திலும், அதை செய்ய வேண்டாம் இதை செய்ய வேண்டாம் என்று அவர்களிடம் சொல்லக் கூடாது, அதே போன்று தான் மாணவர்களிடமும் இந்தியை படிக்க வேண்டாம், இந்தி ஒரு அன்னிய மொழி என்றெல்லாம் கூறுவதும் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN: Sir, how is the subject the hon. member is speaking about at present relevant?

MR. SPEAKER: So far, he has referred only to an example. (Laughter.)

SRI J. MATHA GOWDER: அதை நான் ஒரு உதாரணத் திற்காகத் தான் குறிப்பிட்டேனே தவிர வேறு ஒன்றுமில்லே. நம் நாட்டிலுள்ளவர்கள் அரை மணி நேரம் அல்ல ஒரு மணி நேரம் வேண்டுமானுலும் அதிகமாக வேலே செய்வதற்குத் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இங்கு மட்டுமல்ல, இந்தியாவில் எங்கு போனாலும் சரி, பம்பாயிக்குப் போனாலும் சரி, அல்லது வேறு எந்த மாகாணத்துக்குப் போனாலும் சரி, மதராசிகள் என்று சொல்லக்கூடிய நம் நாட்டு உத்தியோகஸ் தர்கள் எல்லாம் அவ்வளவு அதிகமாகவும் திறமையாகவும் வேலே செய்கிறார்கள். ஆகவே திறமையோடு இருப்பவர்களே திறமை யற்றவர்களாக ஆக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இதே போன்றுதான் மொழி விஷயத்திலும் எல்லா மொழியையும் படிப்பதற்கே நம் நாட்டில் உள்ளவர்கள் திறமை உள்ளவர்களாக, சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களே இந்தி படிக்கக்கூடாது, அது ஒரு அந்நிய மொழி என்று கூறி அவர்களேச் சக்தியற்றவர்களாக ஆக்கக் கூடாது. எதிர்க் கட்சிக்காரர்கள் இவ்விதம் சொல்லுவது நாட்டுக்கு நல்லதல்ல. அதற்கு நேர் மாறாக இம்மாதிரிப்பட்ட திட்டங்களேயெல்லாம் வரவேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதின் காரணமாக ஏற்பட்டிருக்கும் செலவுக்காக மான்யம் கொண்டு வந்திருக்கும் போது அதை வரவேற்க வேண்டுமே தவிர ஒரு ரூபாய் குறைக்க வேண்டும் என்று கட் மோஷன் கொடுக்கக்கூடாது, அதற்குப் பதிலாக பாலிசியை வர வேற்றுப் பேசுவதற்காக மோஷன் கொடுத்து அதை வரவேற்று பேச வேண்டும் அதோடு வெளியில் போய் சர்க்காருக்கு

22nd August 1960] [Sri J. Matha Gowder]

எதிராக, சம்பள கமிஷன் அறிக்கை சரியல்ல என்று எதிர்த்துப் பேசுவது சரியல்ல. அதிலும் உண்மைக்குப் புறம்பாக வெளியில் போய் எதிர்க் கட்சிக்காரர்கள் பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் அதிகப் படி மான்யக் கோரிக்கையை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த உப மான்யக் கோரிக்கையைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த உப மான்யக் கோரிக்கையானது, முக்கியமாகச் சம்பளக் கமிஷன் செய்த சிபாரிசுகளை ஒட்டி, நம்மாகாணத்திலுள்ள உத்தியோகஸ்தர் களுக்கு அதிக அளவில் சம்பளம் கொடுத்ததின் காரணமாக இந்த உப மான்யக் கோரிக்கையை கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சபையின் முன் வைத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற பொழுது உண்மையிலே, கனம் அமைச்சர் அவர்கள் நடத்துக் கின்ற கல்வி இலாகாவைப் பற்றி படித்துப் பார்த்தேன். அதில் சம்பள கமிஷன் கூட நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள், செக்கண்டரி ஆசிரியர்கள் சம்பளத்தைக் குறித்து. செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து விட்டு அதற்கு மேல் இரண்டு ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சி படித்து விட்டு வேலைக்கு வருகின்றார்கள். ஆகவே லோயர் டிவிஷன் கிளார்க் சம்பளத்தை விட இவர்களுக்கு உண்மையாக அதிகச் சம்பளம் இருக்க வேண்டியது நியாயம்தான் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இவர்களுக்கான சம்பளத்தைத் தீர்மானிக்கின்ற பொழுது இது நியாயம்தான் என்றாலும் சர்க்காரிடம் பணம் இல்லாத காரணத்தினால் அவ்விதம் கொடுக்க முடியவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கின்ற பொழுது உண்மையிலேயே அது மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. சம்பளக் கமிஷன் ஒத்துக்கொண்டிருக்கிறது, எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து விட்டு, அதன் பிறகு இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெறுகிறார்கள். ஆகவே லோயர் டிவிஷன் கிளார்க்குக்கு இருக்கின்ற அந்தஸ்து இவர்களுக்கும் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது. அதே சமயத்தில், இதன் காரணமாக லோயர் டிவிஷன் கிளார்க்களுக்கு மட்டும் ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகமாக அனுமதி தர வேண்டும் என்று கேட்டிருப்பது அவ்வளவு நியாயமல்ல, அதே போல் ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு நிர்ணயித்திருக்கும் சம்பளமும் உண்மையிலேயே போதாது. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குக் குறைந்த பட்சம் லோயர் டிவிஷன் கிளார்க் சம்பளத்திற்கு உயர்த்தி அதே போன்று செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு அப்பர் டிவிஷன் கிளார்க் சம்பளத்திற்கு உயர்த்தியிருந்தால் உண்மையிலேயே இந்தச் சம்பளக் கமிஷன் அறிக்கையையும் அதைப் போலவே கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் உப மான்யக் கோரிக்கையையும் ஆதரிக்கலாம். அதைப் போலவே நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வரப்போகின்றது என்று சொல்லுகிறோம்.

ஆனல் தமிழ் புலவர்களுடைய சம்பளத்தைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாய் இருக்கிறது. இதைப்பற்றி பல ஆண்டுகளாக அரசாங்கத்தினிடத்தில் அவர்கள் முறையிட்டு இருக்கிருர்கள்.

(Sri K. Vinayakam in the chair)

அவர்கள் எத்தனையோ முறை அரசாங்கத்தினிடத்தில், எங்களுக்கு நிர்ணயித்திருக்கும் சம்பளம் போதாது, நாங்கள் சாதாரணமாக பி.எ. படிப்பதற்குச் சமமாக தமிழில் தேர்ச்சி பெற்றிருக்கிறேம். ஆகவே எங்களுக்குச் சம்பளத்தை குறைவாக நிர்ணயித்திருப்பது முறையல்ல, ஆகவே ஒரு ஃபஸ்ட் அஸிஸ்டன்ட்டுக்கு இருக்கக்கூடிய சம்பளத்தின் அளவாவது எங்களுக்கு நிர்ணயிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிருர்கள், இதைப்பற்றி சம்பளக் கமிஷனுடைய அறிக்கையைப் பார்க்கின்ற பொழுது, அதில் இவர்களைப் பற்றி பிரஸ்தாபிக்கவே இல்லை. இவர்களைப் பற்றி இரண்டு மூன்று வரியில், பண்டிட்களைப் பற்றியும் முன்ஷிகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. செக்கண்டரி கிரேட் என்ன சம்பளம் வாங்குகிருர் களோ, அதே சம்பளத்தைத் தமிழ் செக்கண்டரி ஆசிரியர்களுக்கு கொடுக்கலாம், அதே போன்று ஃப்ஸ்ட்கிரேட் அஸிஸ்டன்ட் வாங்குகின்ற சம்பளம் இவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருந்தும், இதே முறையில் அவர்களுடைய சம்பளம் நிர்ணயிக்கபடவில்லை என்று தெறிகிறது. அதைப் பார்க்கின்ற பொழுது தமிழ் புலவர்கள் ஐந்து ஆண்டு படிக் கிருர்கள். அதோடு ஆங்கிலத்தில் அவர்கள் பி.ஓ.எல். பட்டம் பெறுகிருர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயமாக ஃபஸ்ட்கிரேட் அஸிஸ்டன்ட்க்கு கொடுக்கக்கூடிய சம்பளம் கொடுக்க வேண்டியது மிகவும் நியாயமானது. நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மொழி ஆட்சி மொழியாகப் போகிறது என்று அமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். அமைச்சர்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியிலுள்ளவர்களும் நாங்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கி விட்டோம், நமது நாட்டில் தாய்மொழி ஆட்சி மொழியாக வந்துவிட்டது என்றெல்லாம் சொல்லக்கூடிய நேரத்தில், தமிழ் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சம்பளத்தைப் பார்த்தால், மிகவும் முன்னுக்குப் பின் முரணுக இருக்கின்ற முறையில்தான் நடவடிக்கை எடுத்ய- வருகிருர்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் பி.ஓ.எல். பட்டம் பெறுகிருர்கள் என்ருல், பி.எ.-க்கு இருக்கிற ஆங்கிலப் பாடங்கள் எல்லாம் படிக்க வேண்டும். அதில் படித்துத்தான் இவர்கள் தேர்ச்சி பெறுகிருர்கள். அப்பேர்பட்டவர்கள் பலர் உயர்நிலை பள்ளிகளில் ஆசிரியர்களாக இருக்கிருர்கள். இப்படிப்பட்டவர் களுக்கு ஃபஸ்ட் கிரேட் அஸிஸ்டன்ட் வாங்கும் சம்பளத்தை நிர்ணயித்திருந்தால் உண்மையிலேயே நான் இந்த உப மான்யக் கோரிக்கையை வரவேற்றிருப்பேன். சம்பளக் கமிஷன் அறிக்கையில் வேறு பல பிரச்னைகளைப் பற்றி சொல்லப்

22nd August 1960] [Sri S. M. Annamalai]

பட்டிருக்கிறது. தமிழ் புலவர்களை பொறுத்த மட்டில், உயர் நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பதவிகள் தரப்பட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் அதைப் பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஏன் இதைப் பற்றி இப்போது குறிப்பிடுகிறேன் என்றால், நாம் தமிழை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம், அதோடு தமிழ் நல்ல முறையில் பரவ வேண்டுமானால் நல்ல ஆசிரியர்கள் வேண்டும், அதோடு அவர்கள் உற்சாகம் அளிக்கும் வகையில் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அந்த முறையில், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க வேண்டும். அதே போன்று ஃபிஸ்ட் கிரேட் அஸிஸ்டண்ட் சம்பளம் இவர்களுக்கும் கொடுக்க வேண்டும். அது இல்லை என்று சொல்வது நியாயமும் அல்ல. நீதியுமல்ல. அதைப் போலவேதான் சமுதாய நலத் திட்ட அதிகாரிகள் ஏறத்தாழ 194 பேர்கள் "நான்-கெஜட்டெட்" அதிகாரிகள் இருக்கின்றார்கள்—30 பேர்கள் "கெஜெட்டெட்" அதிகாரிகள் இருக்கிறார்கள். இரண்டு பிர்காக்களை வைத்துக்கொண்டு ஒரு சமுதாய நலத் திட்ட அதிகாரி வேலையைச் செய்து கொண்டு வருகிறார். ஏறத்தாழ 30 பேர்கள் "கெஜெட்டெட்" பதவியுள்ள அதிகாரிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு தாலூகா பூராவையும் பார்த்து வரக்கூடிய தாசில்தார்களை "நான்-கெஜெட்டெட்" அதிகாரிகள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். சம்பளக் கமிஷனின் அறிக்கையைப் பார்த்தால் தாசில்தார் பதவியை "கெஜெட்டெட்"-ஆக உயர்த்தலாம் என்று சொல்லிவிட்டு, சில காரணங்களையொட்டி "கெஜெட்டெட்"-ஆக உயர்த்த வேண்டிய தேவையில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே அறிக்கையில் ஆந்திர மாகாணத்தில் "கெஜெடெட்" பதவியாக தாசில்தார்களை ஆக்கிவிட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாகாண சர்க்காரினால் நியமிக்கப்பட்ட சம்பளக் கமிஷன் அதையும் சொல்லிவிட்டு, உண்மையையும் வெட்ட வெளிச்சமாகச் சொல்லிவிட்டு, இருந்தாலும் "கெஜெட்டெட்"-ஆகச் செய்ய வேண்டிய தேவை யில்லை என்று சொல்லியிருக்கிறது. தாசில்தார்கள், சமுதாய நலத் திட்ட அதிகாரிகள் என்ன பணியை ஆற்றுகிறார்களோ அதைவிட அதிகமாக ஆற்றவேண்டி இருக்கிறது என்று சம்பளக் கமிஷன் அறிக்கையில் காணப்படுகின்றது. இரண்டு பிர்க்காக்களுக்கு அதிகாரியாக இருக்கக்கூடிய ஒருவருக்கு "கெஜெட்டெட்" பதிவி தந்துவிட்டு தாலூகா பூராவிற்கும் பொறுப்பாக இருக்கக்கூடிய தாசில்தாருக்கு "நான்-கெஜெட்டெட்" பதவி என்று நிர்ணயித்திருப்பது எப்படிப் பொருத்தம்? "கெஜெட்டெட்" பதவியுள்ள சமுதாய நலத் திட்ட அதிகாரிக்கு சம்பளக் கமிஷன் ரூ. 300–15–450 என்று சிபாரிசு செய்து, அது இந்தச் சர்க்காரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் தாசில்தாருக்கு இந்தச் சம்பளக் கமிஷன் ரூ. 250–15–400 என்று சிபாரிசு செய்து அதையும்

22nd August 1960] [Sri S. M. Annamalai]

இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு அதிகாரி மற்றொரு அதிகாரியை விடக் குறைவாகச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, அதிகமான இடங்களைத் தன்னுடைய அதிகாரத்தில் வைத்துக்கொண்டு இருக்க வேண்டும் என்று சொல்லுவது நியாயமாகுமா? சமுதாய நலத் திட்ட அதிகாரியை விட அதிக வேலையைச் செய்து கொண்டு, சமுதாய நலத் திட்டப் பகுதிகளுக்கு "கெஜெட்டெட்" அதிகாரிகளைப் போட்டு, அந்தச் சமுதாய நலத் திட்டப் பகுதிகளுக்கு தாசில்தார் எக்ஸ்-அஃபிஷியோ கமிஷனர் என்று இருக்க வேண்டும் என்றால், இந்த அதிகாரம் போதுமா? அவர்களுக்குத் தரக் கூடிய சம்பளம் போதுமா? அதை வைத்துக்கொண்டு மனமார எப்படி வேலை செய்வார்கள்? இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ரெவின்யூ இலாகாவிற்கும் சமுதாய நலத் திட்ட இலாகாவிற்குமிடையே சிறிது மன வேறுபாடு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. சமுதாய நலத் திட்ட இலாகாவானது புதிதாக ஏற்படுத்தப்பட்ட இலாகா. ரெவின்யூ இலாகா பழைய காலம் தொட்டு இருந்து வரக் கூடிய இலாகா. இப்படிப்பட்ட இலாகாவில் இருக்கும் அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வோ, அல்லது சமுதாய நலத் திட்ட இலாகாவில் வேலை செய்யக் கூடிய உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் நமக்குக் கிடைக்கவில்லையே என்ற மனக் குறையோ இருந்து? வருகிறது. இன்றைக்குப் பார்த்தால் இரண்டு பிர்க்காக்களுக்கு மட்டும் அதிகாரியாக இருக்கக் கூடியவர் "ஜீப்" வைத்திருக்கிறார். தாலூக்கா பூராவிற்கும் தாசில்தார் அதிகாரியாக இருக்கிறார்—ஏறத்தாழ 6 பிர்க்காக்களுக்கு அதிகாரியாக இருக்கிறார்—இவர் சமுதாய நலத் திட்ட வேலைகளையும் பார்க்க வேண்டும், எந்த அதிகாரியையும் பார்க்க வேண்டும். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொன்னார்கள் "நாயை எங்கு அடித்தாலும் அது முன் காலைத்தான் நொண்டும்—அதைப் போலவே யார் எந்த இலாகாவில் குற்றம் புரிந்தாலும் அது கடைசியில் என்னுடைய இலாகாவிற்குத்தான் வந்து சேரும்" என்று. அப்படிப்பட்ட இலாகாவில் பணியாற்றும் தாசில்தார்களை "நான்-கெஜட்டெட்" என்று நிர்ணயித்திருப்பது அவ்வளவு பொருத்தமல்ல என்று இந்தச் சட்ட மன்றத்தின் முன்பு சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றி இந்த சம்பளக் கமிஷனுடைய அறிக்கையில் காணப்படும் என்று மிக மிக ஆவலாக கிராம உத்தியோகஸ்தர்கள் கவனித்து வந்தார்கள். இப்போது நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டும் நிலையில் இருக்கிறோம். எதையெடுத்தாலும்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடுவதற்குப் புள்ளி விவரம் சேகரித்து தருவது முதல்—இவர்கள்தான் செய்ய வேண்டியிருக்கிறது. இவர்கள்தான் இந்த ஆட்சியின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு முக்கியமான விஷயங்களை அடிப்படையிலிருந்து எடுத்துச் சொல்பவர்கள் இந்த கிராம

22nd August 1960] [Sri S. M. Annamalai]

அதிகாரிகள் தான். அப்படிப்பட்ட முதுகெலும்பு போன்ற வர்களைப் பற்றி ஒன்றும் இந்தச் சம்பளக் கமிஷனுடைய அறிக்கையில் சொல்லப்படவில்லை—அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்படவில்லை. சர்க்கார் இதற்கு முன்னால் பரம்பரை பாத்தியதையை ஒழித்துக் கட்டப் போகிறோம்—அது பரிசீலனையில் இருக்கிறது—என்று கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொல்லிவந்து, பிறகு ஏனோ கைவிட்டுவிட்டார்கள்—தேவையில்லை என்று கைவிட்டுவிட்டார்கள். 1955-ம் ஆண்டிலேயே "காபினெட்" லெவலில் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டது. இந்தக் கமிட்டியின் அறிக்கை என்னவாயிற்று ? அதன் மீது அரசாங்கம் என்ன முடிவு எடுத்தார்கள்? முதலில் பரம்பரை உத்தியோகத்தை ஒழித்துக் கட்டுவதாகச் சொல்லி, பிறகு இப்போது தேவையில்லை, நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் முதலியன வரும் போது அவர்களுடைய அனுபவம் தேவையாக இருக்கிறது என்று; தாற்காலிகமாக பரம்பரை பாத்தியதை இருக்கட்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று அஷ்யூரன்ஸ் கமிட்டியில் பார்த்தேன். பரம்பரை பாத்தியதை எப்படி நிர்ணயிப்பது என்பதைத் தாற்காலிகமாக விட்டு வைத்திருக்கிறோம் என்று சொல்லும்போது சம்பளத்தைப் பற்றி ஏன் சர்க்கார் கவனிக்க வில்லை. இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு அறிக்கையைப் பார்த்தேன். சமுதாய நலத்திட்டப் பகுதிகளில் வேலை செய்யக் கூடிய இந்தக் கிராம கர்ணங்களுக்கு 15 ரூபாய் வீதமும் 10 ரூபாய் வீதமும் உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள். அதைப் போலவே கிராம மணியக்காரர்களுக்கு 7 ரூபாய் விதமும் 5 ரூபாய் விதமும் உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே தோட்டி, தலையாரிகளுக்கு மூன்று படி கேழ்வரகு உயர்த்தியிருக்கிறார்கள். மூன்று படி கேழ்வரகு என்றால் 2 ரூபாய் முதல் 3 ரூபாய் வரையில் இருக்கும். மூன்று ரூபாய் உயர்த்தியிருப்பதில், மூன்று படி கேழ்வரகு கூட வாங்க முடியாது. அப்படி உயர்த்திவிட்டு கிராம அதிகாரிகளைப் புறக்கணித்திருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் தேவையில்லை என்று சொன்னால், "நாங்கள் வேறுவித கொள்கையை கையாளப் போகிறோம், இந்தந்தக் கொள்கைகளைக் கையாளப் போகிறோம்" என்று திட்ட வட்டமாகச் சொல்ல வேண்டும். இவர்கள் "பார்ட்-டைம் வொர்க்கர்ஸ்"—பகுதி நேர வேலை செய்து வருகிறார்கள் என்று சொல்லுவது இந்தக் காலத்திற்குப் பொருந்தாது. சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் அவர்களுடைய பணி மேலும் மேலும் தேவைப்படுகிறது—எல்லா இலாகாக்களுக்கும் தேவைப்படுகிறது. இவர்கள் மற்ற அதிகாரிகளைவிட இரவும் பகலுமாக நன்றாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த அதிகாரி சென்றாலும் அவர்களுக்கு அடிப்படையான நல்ல யோசனை சொல்லியும், புள்ளிவிவரங்களைக் கொடுத்தும், அவர்களுடைய காரியங்களை உணர்ந்து செய்தும் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யக் கூடிய கிராம அதிகாரிகளின் சம்பளம் ஏன் லோயர் டிவிஷன் கிளார்க் வாங்கும் சம்பள அளவிற்கு

[Sri S. M. Annamalai] [22nd August 1960

உயர்த்தப்பட்டக்கூடாது ? ஐந்தாண்டுத் திட்டம் தீட்டி விட்டோம், நம் நாடு முன்னேற்றம் அடைந்து விட்டது என்று பெரும் புகழோடு அவர்களுடைய பணியைப் பற்றி பேசுகின்ற சர்க்கார், நிர்வாகத்திற்கே அடிப்படையாக இருக்கக்கூடிய கிராம அதிகாரிகளுடைய கோட்டி, தலையாரிகளுடைய, சம்பளத்தை ஏன் உயர்த்தக் கூடாது ? அதைவிட்டு, இப்போது சம்பளக் கமிஷனுடைய அறிக்கை வந்துவிட்டது. அறிக்கை வந்து எல்லா உத்தியோகஸ்தர்களுடைய சம்பளமும் கொஞ்சமாவது உயர்ந்திருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தாவிட்டால் எங்கே அவர்கள் கோபப்படப் போகிறார்களோ என்று நினைத்து 15 ரூபாய், 10 ரூபாய் என்று அவர்களுக்குச் சிறிய தொகையை உயர்த்தியிருப்பது அவ்வளவு நியாயமல்ல. இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதைப் போலவே கிராமத் தோட்டி, தலையாரிகள் என்ன சம்பளம் பெறுகிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது போதுமா இந்த காலத்திற்கு என்று பார்க்க வேண்டும். ஒரு நாளுக்கு $\frac{1}{2}$ ரூபாய் $\frac{3}{4}$ ரூபாய் கூடக் கிடைக்கவில்லையே; அதை வைத்துக் கொண்டு தோட்டி, தலையாரிகள், சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் பஞ்சாயத்து யூனியன் சட்டம் வந்த பிறகு மரங்கள், புறம்போக்கு நிலங்கள் முதலியவைகளை இந்த அதிகாரிகள் தான் பார்க்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள்? இவைகள் அனைத்தையும் கிராம அதிகாரிகள் தான் பாதுகாக்க வேண்டும். இனிமேல், சமுதாய நலத் திட்ட அதிகாரிகள் வேண்டுமானால்
10-00 a.m. "கிராம அதிகாரிகள் தங்களுக்கு அடங்கி நடக்கவில்லை" என்று கூட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கோ, கலெக்டருக்கோ ரிப்போர்ட் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அவர்களுடைய வேலையைக் கண்காணிக்கும் சர்க்கார், அவர்களுடைய வேலையில் குறைகாணும் சர்க்கார், இப்படி மேலும் மேலும் அவர்களுக்கு வேலையைத் தந்துகொண்டிருக்கும் இந்தச் சர்க்கார், அடிப்படையாக இருக்கும் கிராம அதிகாரிகள், கிராமத்தில் உள்ள தோட்டி, தலையாரிகள் சம்பளத்தையும் உயர்த்தவில்லையென்றால் எப்படி இந்த மான்யக் கோரிக்கையை நாங்கள் எற்றுக்கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI T. T. DANIEL : Mr. Chairman, I shall deal with the salient features of the Supplementary Statement of Expenditure for the year 1960–61. At the outset, I have stated that the Supplementary Demand is in respect of the additional expenditure which the Government have incurred to the extent of 3·7 crores of rupees in the current year for implementing their decision on the Pay Commission Report.

Sir, the report of the Pay Commission is really a historic and unique one. I say that it is unique because, of course, the framers of the report have approached the problem from all angles keeping

22nd August 1960] [Sri T. T. Daniel]

in their mind the legitimate aspirations of all the State employees, as well as the demand of the teachers working in the various agencies of the State. I would characterise the decision of the Government on the report of the Pay Commission as very just, proper and equitable. The Government are keeping in their mind that there is an upward rise in the prices of all the essential commodities and have revised the scales of pay of all the State employees including the teachers working in the various agencies. One of the cardinal principles that the Government have accepted is that the teachers do really have a prominent role in building up our nation and so they have revised the scales of pay of all the teachers to such an extent as to attract worthy talents to the teaching profession.

One of the long demands of the teachers in the State was that there should be no disparity in the Scales of pay in different agencies. This was cry of the teachers and it was not a cry in a wilderness. Their cry has touched the soft corners of our Government and I must say that our Government are accepting the principle that there should be similar pay for persons doing similar work and with similar qualifications. They have decided that this disparity in the scales of pay of teachers should not be allowed to continue in future. They have given uniform scales of pay for the teachers.

Secondly, I would say Sir, our Government have also fixed the minimum scale of pay of Rs. 60 for the Government servants who come from the working classes and also they have fixed the minimum scale of pay of Rs. 100 for the Lower Division Clerks in our State.

The Government have decided not only to fix the scale of pay of the Government employees at the next stage of increment but they have also taken into consideration the past service of the Government employees and they have given one weightage, i.e.. one increment for every three completed years of last service in fixing their pay in the revised scale.

It is a wholesome decision of the Government to extend the liberalised pension schemes applicable to the Central Government employees to the State employees as well. On account of this decision of the Government a public servant who retires will get a fixed amount of gratuity. If he dies in harness his family will get not only a fixed amount of gratuity but also a fixed pension.

Again, Sir, the Government have added the major portion of the Dearness Allowance to the basic pay of the Government servants and at the same time they have made slight increase in the general emoluments. This factor really counts very much at the time when the public servants retire. Although the State employees have been clamouring that there should be no disparity

in Dearness Allowance between the State employees and the Central employees, it has been correctly pointed out by the framers of the Pay Commission Report that if this request of the State employees were to be conceded, the Government will have to spend nearly 9 crores of rupees, which they have said that within the limited resources of the State Government it will not be possible at present.

At present, Sir, I would suggest that our Government is spending nearly 25 crores for administrative expenses. Out of this 25 crores nearly 12 crores of rupees are spent for the salary and allowances of the Gazetted and Non-Gazetted officers. Sir, some rules are to be framed to impose a limit on the travelling allowance so that the Government may be able to reduce the travelling allowance, which they can use for meeting this additional expenditure, which the Government have to incur. I would also suggest with all respect to the Government, that our Government should constitute a Committee for the purpose of finding out whether there are administrative leakages if any, in our State so that they can take steps to put an end to such leakages.

So far as the decisions of the Pay Commission relating to the transferred territory are concerned, I say, Sir, generally speaking that the T.C. State personnel welcome the decision of the Government on the Pay Commission Report. I want to say at this juncture that although the scale of pay of the Graduate teachers have been raised from Rs. 85 to 140 in the Madras State, so far as the T.C. State personnel are concerned they are labouring under some difficulties. We have been repeatedly pointing out to the Government that Graduate Teachers working in private agencies in the transferred area are getting only Rs. 55 whereas their counter-parts in other parts of the State are getting Rs. 85. We are therefore requesting the Government that their scales of pay should be increased from Rs. 55 to Rs. 85 and that their scale of pay shall be fixed as such on the date of integration. I would therefore suggest, that before implementing the report of the Pay Commission so far as Graduate teachers of the transferred territory are concerned, the Government should be pleased to fix them in the Madras scale of pay on the date of integration and afterwards they should implement the scale of pay suggested by the Pay Commission from 1st June 1960. I believe, Sir, that this is only a natural demand and I am fully sure that our Government will pay need to this demand and redress the very long standing grievance of the unfortunate Graduate teachers working in the private agencies of the transferred territory. Perhaps, I think that there is some delay on the part of the Government. It may be a legitimate delay so far as the Government is concerned. I think, Sir, that perhaps as there occurs some delay sometimes to fulfil the wishes of a wife, so too our Government on account of their unknown difficulties takes some time to gratify this demand of these Graduate teachers.

22nd August 1960] [Sri T. T. Daniel]

I request, Sir, on behalf of these Graduate teachers working in the private agencies in the transferred territory that orders will be passed fixing their scales of pay at Rs. 85 on the date of integration and that the decision of the Pay Commission be implemented from 1st June 1960.

Then coming to the school final teachers who have undergone one year's training and who are working in schools under private agencies as well as in the Government schools, they are deeply hurt by the recent order of the Government. According to that order, these teachers in the transferred territory have been classified as elementary grade teachers who have got only a qualification of III Form and two years' training. So, I would request the Government that in view of the fact that these teachers have got several years' of teaching experience and have passed the school final examination and undergone one year training under the then Travancore-Cochin State Government which gave them the authority or licence to teach in the middle scholos, to take a sympathetic view and classify them as secondary grade teachers and thus extend the benefits given to the secondary grade teachers in the Pay Commission's Report and accepted by the Government, in their case also.

Another difficulty in relation to Tamil and Malayalam Pandits in the transferred territory incidentally arose. Whereas our Government have recommended a starting pay of Rs. 140 for the Tamil Pundits irrespective of the fact whether they are graduates or under-graduates, in the transferred territory, second grade Pandits are given only a starting pay of Rs. 90. A second grade Pandit who has got B.T. qualification is given starting pay of Rs. 140. While accepting the cardinal principle that there should be equality of pay between the teachers who are doing the same service, one fails to understand why there should be disparity in pay in so far as second grade pandits working in the transferred area are concerned. I think this is perhaps a departmental omission which I request the Government to rectify it at a very early date.

Then as regards the pay of conductors in the Transport Department, we find that they are given a starting pay of Rs. 80. Many conductors there are graduates and under-graduates and I request that the pay of the lower division clerks should be given to the conductors working in the transferred territory.

Sir, it is really a matter of great pleasure to know that our Government have decided to increase the house allowance in the case of employees working in the Madras City. I would request that the house allowance should also be given to other State employees and teachers working under different agencies in our State.

[Sri T. T. Daniel] [22nd August 1960

Lastly, I would request the Government to extend the Provident Fund Scheme, the Insurance Scheme and the Liberal Pension Scheme applicable to the State Government employees to all the teachers working under private agencies.

ஒருவர் ரிட்டயர் ஆகிவிட்டால் "பென்ஷன் பெனிபிட்ஸ்" ப்ராவிடன்ட் பண்ட், க்ராட்டிவிட்டி போன்றவைகள் அல்லது ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்தாருக்கு வர வேண்டிய பணம் இருக்கிறதே அவைகளையெல்லாம் சீக்கிரம் கொடுத்தால் பரவாயில்லை. அப்படிச் சீக்கிரம் கொடுக்கப்பட வேண்டும். எனக்குத் தெரியும், ஒரு கான்ஸ்டபிள் செத்து 9 மாதங்கள் ஆகின்றன. அவர் இறந்ததினுல் அவர் மனைவி சாகாமல் செத்துக்கொண்டேயிருக்கிருள். அரசாங்கத்திலிருந்து அவளுக்குப் பணம் கிடைப்பதற்கு முன்னமேயே அவள் அடுத்த உலகம் போய்விடுவாள் என்ற நிலைதான் இருக்கிறது. இப்படி காரியங்கள் நடந்தால் அரசாங்கம் நடந்தால், மக்களின் வயிற்றெரிச்சல்தான் அதிகமாகும். பணக்காரன் என்ருல் பரவாயில்லை. இப்படி ஒரு கான்ஸ்டேபிள் இறந்து விட்டால், இம்மாதிரிப்பட்ட அரசாங்க ஊழியர்கள் இறந்து விட்டால், அவருக்கு வர வேண்டிய பணத்தை ஆயிரமோ இரண்டாயிரமோ ஒருவர் ரிட்டயராகி விட்டால் அவரிடம் அல்லது இறந்து விட்டால் அவரது குடும்பத்தாருக்கு ஒரு மாதத்திற்குள் கொடுத்து விட வேண்டும். அதற்காக ஸ்பெஷல் ஸ்டாஃப் வைத்தாலும் பரவாயில்லை. இப்பொழுதுள்ள நிலை அந்தப் பணத்தை வாங்குவதற்கு முன்னரே அவர் அடுத்த உலகம் சென்று விடுகிருர், அவரது லீகல் ஹெயர்ஸ் அல்லது அவர் ஸக்ஸஸர் கூட அப்பணத்தை வாங்க முடியாது அடுத்த உலகத்திற்கு போய் விடுகிருர்கள். இந்த நிலையை நீடிக்க விடுவது நல்லதல்ல. ஒரு கான்ஸ்டபிள் இறந்து 9 மாதங்கள் ஆகின்றன. அதனுல் அவர் மனைவி படும் பல கஷ்டங்களோடு அவரது பணமும் வந்து சேராவிட்டால் அவர் மனைவியை வைத்து சாப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறவர்கள் "அந்தப் பணம் வருவது வரை உன்னை வைத்து சாப்பாடு போட முடியாது" என்று வெளியே துரத்தி விடுகிருர்கள். ஆகவே, இந்நிலையை நீடிக்கவிடாது, இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிதியமைச்சர் அவர்கள் அவர்களது காலத்திலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களது காலத்திலேயே இந்த நல்ல காரியத்தையும் செய்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒருவர் ரிட்டயராகி விட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ எப்படியாயினும் ஒரு மாதத்திற்குள் அவருக்குப் போய் சேர வேண்டிய பணம் அவருக்கோ அல்லது அவரது ஹெயர்ஸ்க்கோ போய் சேர வேண்டும். அப்படியானுல்தான், அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு ஒரு சிறிய வியாபாரம் செய்யவோ அல்லது வேறு எந்த முறையிலாவது அவர்களது வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியும். அப்படியில்லாவிட்டால் அந்தப் பணம் வரும், வரும் என்று எதிர் பார்த்து அது வராது அவர் செத்து போய்விட்டால் பணம், பணம் என்று நினைத்து அவரது ஆத்மாவுக்குக்கூட சாந்தி கிடைக்காது. ஆகவே, இந்தக் காரியத்தில் முழு கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பின்னர், ப்ரமோஷன்ஸ், செலக்ஷன் போஸ்ட் என்று சொல்லப் படுகிறது. மேல் அதிகாரிகள் விருப்பப்படி செய்யலாம். மிகத்

22nd August 1960] [Srimathi T. N. Anandanayaki]

திறமையானவர்களுக்கு உற்சாகம் காட்டினல் அதன் பயனுக மற்றவர்களும் நன்கு வேலே செய்யக்கூடும். ஆனல் "அன் ஜெஸ்ட் செலக்ஷன்" இருக்கக் கூடாது. நியாயத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும். நல்ல சீனியாரிட்டி இருக்கலாம், நல்ல அனுபவம் இருக்கலாம், ப்ளாக் மார்க் என்பதேயிருக்காது, இப்படியிருந்தும் அவரை "ஓவர் லுக்" செய்து வேறு ஒருவருக்கு ப்ரமோஷன் கொடுப்பதா? இன்று ஒருவரின் கீழ் வேலே செய்தவர் நாளேக்கு அவருக்கு மேல் போய் அவரை அதிகாரம் செய்து வேலே வாங்குவது என்ருல், தனக்குக் கீழ் இருந்தவனிடம் வேலே செய்ய வேண்டியிருக்கிறதே என்ற மனத்தாங்கல் அவருக்கு ஏற்படக்கூடும். நம்மை விட திறமைசாலியில்லே, நமக்குக் கீழ் வேலே செய்தவன் நம்மையே வேலே வாங்குகிருன். என்ற நினேப்பு வந்தால் "எபிஷியன்ஸி" பாதிக்கப் படும். சிவில் சர்வீஸ் உருப்படியாக இல்லாவிட்டால் அந்த ஜனநாயகம் உருப்படாது. நியாயப்படி செய்தால் சரி. டெப்டி தாசில்தார் போஸ்டுக்கு கலெக்டர் ஒரு பானல் அனுப்பு கிருர். அந்தப் பானலே போர்ட் ஆப் ரெவின்யூ ஏப்பம் இட்டு விடுகிறது. லோக்கல் அத்தாரிடீஸ்க்குத்தான் ஓரளவு இன்னர் இன்னர் இப்படி இப்படி வேலே செய்கிருர்கள் என்று தெரியும். அப்படி வருகிற பானல், போர்ட் ஆப் ரெவின்யூ-ல் அபேஸ்ஸாகி விடுகிறது. அந்தப் பானல் மறைந்து புதுப் பெயர்கள் சேர்க்கப்படுகின்றன. அதில் இல்லாதவர்களுக்கு ப்ரமோஷன்ஸ் கொடுக்கப் படுகிறது. ஆனல் இதுபற்றி பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் சொல்ல முடியாத ஒரு நிலே. வெளியிலும் சொல்ல முடியவில்லே, மனத்திற்குள்ளே வைத்துக் கொண்டு அனுபவிக்கவும் முடியாத ஒரு நிலே. சட்டதிட்டங் களுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் நடக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் அது பற்றி வெளியே சொல்வதற்கு இயலாத நிலேயில் இருக்கிருர்கள். சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டுத்தான் இருக்க வேண்டும். கடைசியில், வோட்டுப் பெற்று இங்கே வந்திருக்கும் என் போன்ருேர்களிடம் வருகிருர்கள். எம்களா லும் ஒன்றும் செய்ய முடியவில்லே. அவர்களுக்கு இந்தத் தவிப்பு அதிகமாக இருப்பதால், தாங்கள் ராங்கை எப்படியாவது வாங்க வேண்டுமென்று, எந்த மந்திரியைப் பார்க்கலாம், எந்த எம்.எல்.ஏ.-யைப் பிடிக்கலாம் என்று இங்கு சென்னேக்கு வருகிருர்கள். ராங்க் கிடைப்பது வரையில் அவர்களுக்கு ஒரு வேலேயும் ஓடாது. ஆகவே, போர்ட் ஆப் ரெவின்யூக்கு போன பானல் என்னவாயிற்று என்று அரசாங்கம் அவர்களேக் கேட்பார்களானல் அவர்கள் விழித்துக் கொள்வார்கள். காரணம் இன்றி ஏன் பானலே மாற்றினீர்கள் என்று கேட்டால் அவர்களுக்குப் பயம் இருக்கும். அப்படிப்பட்ட பயம் இல்லாமல் இருந்தால் முக்கியமாக ஊழியர்களுடைய எஃபிஷியன்ஸி கெட்டுப் போகும். ஆகவே இதில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தினல் வரவேற்கத் தக்கதாய் இருக்கும்.

அதற்கப்புறம் ஒரு ஃபைல் எங்கே யிருக்கிறது என்று பார்ப்பதே இப்போது கஷ்டமாயிருக்கிறது. உதாரணமாக அக்ரிகல்சரல் இன்ஸ்ருமென்ட்ஸ்-க்காக இரும்பு வேண்டுமென்று

[Srimathi T. N. Anandanayaki] [22nd August 1960

12-30 p.m. கேட்டு ஒரு நபர் மனு அனுப்பியிருந்தால் அது எங்கே போயிருக்கிறது என்றே தெரியாது . . . (குறுக்கீடு)

Because I find almost all the Departments asking for supplementary demands and thought this is the appropriate time and chance for me to bring to the notice of the Hon. Minister for Finance. . . . . .

இப்போது தான் நேரம் சற்று கூடுதலாக (அன்லிமிடெட்) கிடைத்திருக்கிறது. ஆகவே இப்போதுதான் இவற்றையெல்லாம் கூற முடியும் . . .

SRI D. S. AUTHIMOOLAM: ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், கனம் அங்கத்தினர் அவர்கள் "கிம்பளம்" என்று குறிப்பிட்டார்களே இது . . . (குறுக்கீடு)

SRIMATHI T. N. ANANDANAYAKI: இவ்விதம் ஒரு நபர் மனு செய்திருந்தால் அந்தப் ஃபைல் முதலாவது இன்டஸ்ரீஸ் டிப்பார்ட் மெண்டுக்குப் போய் பின்னல் லீகல் டிப்பார்ட் மெண்டுக்குப் போய் அதன் பின்னல், பைனன்ஸ் டிபார்ட் மெண்டுக்குப் போய் இவ்விதம் பல இடங்களுக்குப் போய் முடிவு எடுக்கப்படுகிறது. இதற்குள்ளாக மனு செய்த நபர் தன் வேலையையே நிறுத்திவிடுவார். இப்படி ஒரு தாளோடு ஆரம்பமான ஃபைல் கடைசியில் பார்க்கும்போது மொத்தையாகி விடுகிறது. அது மட்டுமல்ல, அந்த பைல் எங்கேயிருக்கிறது என்று அறியவே முடியாது அக்ரிகல்ச்சர் டிப்பார்ட்மென்டில் கேட்டால் லீகல் டிப்பார்ட்மென்டுக்குப் போயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கு கேட்டால் பைனன்ஸ் டிப்பார்ட்மென்டுக்குப் போயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட பைலைக் கண்டுபிடிப்பது சிலருக்குத்தான் முடிகிறது. பிரமப் பிரயத்தனம் செய்தால்தான் ஃபைல் எங்கே யிருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியும். இப்படி பல இடங்களுக்குப் போவதால் பல காம்ப்ளிகேஷன் ஏற்படுகிறது. அந்த காலத்தில் ஒருவருடைய பொறுப்பை மற்றவரிடம் சுமத்துவதற்காக இவ்விதம் பல டிப்பார்ட்மெண்டுகளுக்குப் போக வேண்டும் என்ற முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். They can shift the blame to the other Departments. அதோடு ஏதாவது தவறுகள் இருந்தால் ஒரு டிப்பார்ட்மென்ட் கண்ணுக்குப் படாமல் இருந்தால் இன்னொரு டிப்பார்ட்மென்ட்-க்குப் படும் என்ற அளவில் ஜாக்கிறதையாக இருக்க வேண்டும் என்ற அளவிலும் தான் இவ்விதம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனல் "வெல்ஃபேர்" ஸ்டேட்டை ஏற்படுத்த வேண்டும் என்று பலவிதமான திட்டங்களை எல்லாம் போட்டிருக்கிறோம், அவைகள் எல்லாம் துரிதமாக நிறைவேற வேண்டுமானல் இந்தவிதமான முறைகள் எல்லாம் மாறவேண்டும். மாறவேண்டும் என்று சொல்வது என்னவென்றல் எவ்வளவு தூரம் இவைகளை ஸிம்ப்ளிஃபை பண்ண முடியுமோ அந்த அளவுக்கு ஸிம்பிளிஃபை பண்ண வேண்டும்.

22nd August 1960] [Srimathi T. N. Anandanayaki]

Simplify for better. இரும்பு சம்பந்தப்பட்ட காரியங்களாக இருந்தால், இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மென்டுக்கே எல்லா அதிகாரங்களையும் கொடுத்துவிட வேண்டும். அதே போன்றுதான் கிணறுகள் வெட்டக் கூடிய விஷயத்தில் பி.டப்ளியூ.டி. விலிருந்து ஒரு பக்கம் வெட்டுவதற்கு திட்டமிருக்கிறது, அரிஜன் வெல்ஃபெயர் டிப்பார்ட்மென்ட் மூலம் வெட்டுவதற்கு திட்டமிருக்கிறது. நேஷனல் டெவலப்மென்ட் திட்டத்தின் கீழும் வெட்டுவதற்கு திட்டம் இருக்கிறது. ஆனால் இந்த மூன்று திட்டத்தின் கீழும் சரியானபடி வேலை நடப்பதில்லை, இதைப்பற்றி எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. இவ்விதம் கிணறு வெட்டுவதற்கு மூன்றுவிதமான ஏஜென்ஸிகள் இருக்கின்றன, ஆனால் வேலை சரியாக நடக்கவில்லை என்று அதிலும் கூறப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல குறைகள் இருக்கின்றன, இவற்றையெல்லாம் இப்போது கூறினால் தான் அடுத்த வருடமாவது இவ்விதமான குறைகள் வராதவாறு அமைச்சர் அவர்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் என்ற ஆர்வத்தால் தான் இதைச் சொல்லுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

மேலும், சிறைகள், கோர்ட்கள் இவற்றைப்பற்றியும் சம்பள கமிஷன் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக ஹை கோர்ட்டில் லேட் அவுஸ் இருக்கிறது. அதன் பக்கத்தில் இருக்கக் கூடிய மாடிக்குச் செல்ல வேண்டுமானால் நான்கு மாடிப்படிகள் ஏறிப்போக வேண்டியிருக்கிறது. அந்த மாடியில்தான், பார் கௌன்சில் லைப்ரரி, பப்ளிக் பிராஸிக்யூட்டர் ஆபீஸ், ஜட்ஜ் சேம்பர்ஸ், இவைகள் எல்லாம் இருக்கின்றன. இந்த இடங்களுக்கு எல்லாம் போக வேண்டுமென்றால் ஒவ்வொரு தடவையும் நான்கு மாடிப்படிகள் ஏறி இறங்க வேண்டும். இப்படி ஒவ்வொரு நாளும் படிகள் ஏறி யூட்டர் ஆபீஸ், ஜட்ஜ் சேம்பர்ஸ், இவைகள் எல்லாம் சீக்கிரமாகவே ஆயுசு பாதியாகிவிடும். (குறுக்கீடு) எக்ஸர்ஸைஸ்-ஸாக இருந்தாலும், ஓவர் எக்ஸர்ஸைஸாக இருக்கக் கூடாது, அப்படியிருந்தால் உடம்புக்கு கெடுதல், ஆகவே இதில் கொஞ்சம் கவனம் செலுத்தி அங்கு நாள்தோறும் நான்கு மாடிகள் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிற என் போன்ற வக்கீல்கள், கட்சிக்காரர்கள், இவர்களை எல்லாம் கவனித்து மனிதர்களுடைய முட்டியையும் சற்று கவனத்தில் எடுத்துக் கொண்டு பார்த்து ஒரு லிப்ட் ஏற்படுத்துவதற்கு இதில் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதில் இவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதித்ததற்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

Sri P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நீண்ட நாட்களாக சர்க்கார் ஊழியர்களுடைய சம்பள உயர்வு கோரிக்கையை கடைசியாக ஓரளவு ஏற்றுக் கொண்டு இப்போது சர்க்கார் உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக இதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் சம்பளக்

[Sri P. S. Chinnadurai] [22nd August 1960

கமிஷனின் அறிக்கையையோ, இவைகளை ஆதாரமாகக் கொண்டு இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் உப மான்யக் கோரிக்கை யையோ ஆதாரமாக எடுத்துக் கொண்டு அவைகளில் இருக்கின்ற குறைகளை எடுத்துக் கொண்டு பேச வேண்டு மானாலும் பேசலாம். ஆனால் இப்போது தவிர்க்கக் கூடிய சில விஷயங்களைக் குறித்து நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எப்படியோ வெகு நாட்களாக இருந்து வந்த ஒரு கோரிக்கை யானது பெருமளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். பொதுப் படையாக சர்க்கார் ஊழியர்கள்மத்தியிலும் குறிப்பாக ஆசிரியர்கள் மத்தியிலும் ஒரு வகையான ஆறுதல் ஏற்பட்டிருக் கிறது, இந்த சம்பள கமிஷன் சிபாரிசுகளை சர்க்கார் ஏற்று உத்தரவிட்டதின் மூலமாக என்பதை நான் நிச்சயமாக உணர் கிறேன். அதே நேரத்தில் இங்கும் அங்கும் சில குறைபாடுகள் சம்பள கமிஷன் அறிக்கையில் இருந்தால், அதை நான் பெரிது படுத்திக் கூற விரும்பவில்லை. இந்த சம்பள கமிஷன் சிபாரிசு களை சர்க்கார் ஏற்றுக் கொண்டதின் விளைவாக ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்படுகின்ற செலவுகளை எப்படி சரிகட்டுவது என்ற பிரச்னை குறித்து சம்பளக் கமிஷன் பல நல்ல ஆலோசனைகளை கூறி யிருப்பதை நான் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். இந்த சம்பளக் கமிஷன் சிபாரிசுகள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு இனிமேல், வருங்காலத்தில் ஏழு கோடி சொச்சம் ரூபாய் செலவாகும் என்றிருந்தால் அந்தப் பணத்தை புதிய வரிகளின் மூலம் ஈடுகட்ட வேண்டுமா என்பதைக் குறித்து சம்பளக் கமிஷன் விவாதித்து இருக்கிறது. சூசகமாக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். புதிய வரிகள் போடுவது என்பதைப் பொறுத்த வரையில் நம்முடைய ராஜ்யத்தில் இன்றைக்கு விதிக்கப்பட்டிருக் கின்ற அளவு, பொதுவாக இருக்கின்ற வரி அளவானது, அகில இந்திய சராசரியைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது என்று இரண்டாவது சம்பளக் கமிஷன் எடுத்துக் காட்டியுள்ளதை நம்முடைய ராஜ்ய சம்பளக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது. அகில இந்திய சராசரி 13.3 ரூபாய் என்றிருந்தால் நம்முடைய ராஜ்யத்தில் தலா வரி விகிதம் 14.4 ரூபாய் என்று இருக்கிறது என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதற்கு மேலாக அவர்கள் ஒன்றும் கூறவில்லை. அதே போதுமானது. மேற்கொண்டு புதிய வரிகள் விதிப்பதற்கு, அகில இந்திய சராசரி விகிதத்தோடு நம்முடைய ராஜ்யத்தில் இருக்கின்ற வரி விகிதத்தை ஒப்பிட்டால், புதிய வரிகளை நம்முடைய ராஜ்யத்தில் போடக் கூடாது என்கின்ற முடிவுக்குத்தான் வரமுடியும் என்ற அளவுக்கு, சம்பளக் கமிஷன் தங்களுடைய அறிக்கையில் அந்த அளவோடு நிறுத்தியிருக்கிறார்கள். அதனைத்தான் நான் ராஜ்ய சர்க்காருக்குச் சுட்டிக் காட்டுவேன். இதனால் ஏற்படுகின்ற செலவுகளைச் சரிகட்டுவதற்கு புதிய வரிகள் விதிக்க எந்த வகையிலும் நியாயம் இல்லை என்று மறுபடியும் சர்க்காருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். வரியும் விதிக்கக்கூடாது, சம்பளத்தையும் உயர்த்த வேண்டும் என்று இரண்டையும்

22nd August 1960] [Sri P. S. Chinnadurai]

சொல்கிறார்களே எதிர்கட்சிக்காரர்கள் என்று இங்கு சில ஆளும் கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு பக்கத்தில் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று குறிப்பிடுகிறபொழுது நியாயமாக யார் யாருக்கெல்லாம் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்றிருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர, இவ்வாறு கூறி அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வாறு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லுகிற நிலைமையில் எதிர்கட்சிகள் இல்லை, அதிலும் நிச்சியமாக என்னைப் பொறுத்த வரையிலும் சரி, எங்கள் கட்சியைப் பொறுத்த வரையிலும் அவ்வாறு இல்லை. வேண்டு மென்றே ஆளுகின்ற கட்சிக்குத் தொல்லை கொடுக்க வேண்டு மென்ற நோக்கத்தோடு பெருவாரியாக சம்பள உயர்வு கொடுங்கள் என்றவாறு வாதிக்க எனது கட்சி என்றைக்கும் முனைந்ததில்லை. நாட்டின் பொருளாதார நிலையை அடிப் படையாகக் கொண்டு, ஒரு குடும்பம் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவதற்கேற்ற முறையில் ஒரு சராசரி வருமானம் கிடைக்க இதனையெல்லாம் கணக்கிட்டு, நியாயமான முறையில் ஊதியத்தை நிர்ணயிப்பதன் மூலம்தான் ஒழுங்கான நிர்வாகத்தை—நிர்வாகத் திறனை—எதிர்பார்க்க முடியும் என்று இந்த காரணத்தினால் சம்பள உயர்வு வேண்டுமென்ற சர்க்கார் ஊழியர்களின் கோரிக்கைக்குச் சென்ற சில ஆண்டு காலமாகத் தன்னுடைய ஆதரவைப் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி கொடுத் திருக்கிறது. 1956-வது ஆண்டில் இருந்த விலைவாசி நிலைமைக்கும், 1959-வது ஆண்டு விலைவாசி நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட சகல வகைகளிலேயும், சகல பண்டங்களின் விலைவாசிகளும் 37 சதமானம் உயர்ந்திருக்கிறது என்று இந்திய சர்க்கார் வெளியிட்டுள்ள "இந்தியா 1960" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்லா வகைப் பண்டங் களின் விலைவாசியானது 37 சதமானம் மூன்று ஆண்டுகளில் உயர்ந்திருக்கிறது என்றால், 1946-ம் ஆண்டிலிருந்து கணக்கிடும் போது கிட்டத்தட்ட 100 சதமானம் உயர்ந்திருக்கிறதென்றே சொல்லலாம். இவ்வாறு விலைவாசிகள் அபரிமிதமாக உயர்ந்து கொண்டே போகின்றன. குறிப்பாக அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசியானது கட்டுக்கடங்காமல் ஏறிக் கொண்யேிடயிருந்தால் நிச்சயமாக எவ்வளவு சம்பள உயர்வு கொடுத்தாலும் ஒரு திருப்தி என்பதே ஏற்படுவதற்கு முடியாது. 1946-ம் ஆண்டு நிலைக்கும், 1960-ம் ஆண்டு நிலைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூட விரும்பவில்லை. 1956-வது ஆண்டில்—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கக் காலத்தில்—இருந்த விலைவாசி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் போது எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று கவனிக்க வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்—1959-ம் ஆண்டின் இறுதியில்—சர்க்கார் கணக்குப்படி 37 சதமானம் விலைவாசி உயர்ந்து விட்டிருக்கிறது என்பதை வைத்துக் கொண்டு பார்த்தால் இனி 1961-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள்ளாக இந்த விலைவாசிகள் எந்த அளவு உயரப்

[Sri P. S. Chinnadurai] [22nd August 1960

போகிறதோ என்ற ஐயப்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஆகையால்தான் திட்டங்களின் மூலம் பெருவாரியான தொகை செலவழிக்கப்படுகிற காலத்தில் விலைவாசி ஏறுமல், அப்படியே ஏறினாலும் கூட அதிகப்படியான, அநியாயமான அளவுக்கு ஏறுமல், கட்டுப்படுத்துவது அவசியம். அப்படி விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாத நிலையில் எவ்வளவு சம்பள உயர்வு கொடுத்தாலும் மீண்டும் மீண்டும் இந்தக் கிளர்ச்சி இருந்துகொண்டுதான் இருக்கும் என்று இந்த ராஜ்ய சர்க்காருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலையான விலைவாசிக் கொள்கையை வைத்துக் கொண்டிருந்தால், சம்பள உயர்வுக் கொள்கையை வைத்துக் கொண்டிருந்தால், சர்க்கார் ஊழியர்கள் மத்தியில், குறிப்பாக ஆசிரியர்கள் மத்தியில், சம்பள உயர்வு கோரிக்கைகளைத் தொடர்ந்து நேர்ந்த பலவித கசப்பான நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்கலாம்—தவிர்த்திருக்க முடியும். சரியான விலைவாசிக் கொள்கையோ, அல்லது சரியான சம்பள உயர்வுக் கொள்கையோ இல்லாததால்தான்—உங்களுக்கு என்று சர்க்காரைப் பற்றி நான் சொல்லுவதற்குத் தயாராயில்லை—நமக்கு என்று சொல்லுகிறேன்—நாட்டில் அப்படிப்பட்ட விலைவாசிக் கொள்கையும் நல்ல சம்பளக் கொள்கையும் இல்லாத காரணத்தினுல்தான் மிகவும் கசப்பான நிகழ்ச்சிகள் கடந்த காலத்தில் நிகழ்ந்தன. ராஜ்ய சர்க்கார் ஊழியர்களும், மத்திய சர்க்கார் ஊழியர்களும் விலைவாசி உயர்வைச் சமாளிக்க சம்பள உயர்வு வேண்டுமென்று கோரியும், அவர்களால் எடுத்துக் கூற முடியாத நிலையில் அல்லது அவர்களே புரிந்து கொண்டு சரிவர எடுத்துக் கூற இயலாத நிலையில் பல்வேறுவகையான கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் எல்லாம் நடைபெற்றன. அதன் காரணமாகத்தான் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும். பஞ்சப்படியை அதிகரிக்க வேண்டும், விலைவாசிப் புள்ளிகளோடு பஞ்சப்படியைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு எனது கட்சி ஆதரவு தெரிவிக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. உண்மையில் நம்முடைய நாட்டில் விலைவாசிக் கொள்கையை நாம் திட்டவட்டமாக அமைத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடும் போதே அதற்குரிய நடவடிக்கையை எடுத்திருந்தால், நமது நாட்டிலுள்ள பல்வேறு அரசாங்கங்கள் இப்போது இருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகத் திறமையாகச் செயலாற்றியிருக்க முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இக்கொள்கையை அமைத்துக்கொள்ள தவறிவிட்டோம். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் அடுத்த ஆண்டிலிருந்து வரவிருக்கிறது. அதற்குள் நாம் சரியான விலைவாசிக் கொள்கையை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறேமா என்று இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய ராஜ்யம் மட்டும் விலைவாசிக் கொள்கையை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று நான் நினைக்கவில்லை. இது ஒரு அகில இந்தியப் பிரச்னை. எல்லா ராஜ்யங்களிலும் ஒரே கொள்கையாக இருந்தால்தான்—அகில இந்திய அடிப்படையில் அமைந்திருந்தால்தான்—வெற்றிகரமாக

22nd August 1960] [Sri P. S. Chinnadurai]

இதனை அமுலாக்க முடியும். ஆக, சரியான அகில இந்திய அடிப்படையில் ஒரு விலை வாசிக் கொள்கையை, குறிப்பாக உணவு, மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் ஆகியவைகளைப் பொறுத்த வரையில் நிர்ணயிப்பது மிகவும் அவசியம் என்று இங்கு குறிப்பிடுகிறேன். பாக்கியவசமாக இந்திய அரசாங்கம் விலைவாசிகளை நிர்ணயிக்க ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறது. அந்தக் கமிட்டியிலே நான் நினைக்கிறேன், நம்முடைய ராஜ்ய நிதி அமைச்சர் அவர்களும் அங்கத்தினராக இருக்கிருர் என்று. அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையை விரைவில் சமர்ப்பணம் செய்வதின் மூலம், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்க காலத்தில் நல்ல நிலையான விலைவாசிக் கொள்கை நாட்டில் அமையத் துணை புரிய வேண்டும். அந்த விலைவாசிக் கொள்கையைத் தொடர்ந்து நல்லதொரு சம்பளக் கொள்கை அமையவும் வேண்டும். இப்போது நாம் ஒரு சம்பளத்தை அமைத்திருக்கிருேம். இந்தச் சம்பளம் வருகிற ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு வாழ்க்கைத் தரத்தைச் சரிக்கட்டிக்கொள்ள சர்க்கார் ஊழியர்களுக்கு முற்றிலும் துணையாக இருக்குமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செலவழித்த தொகையைக் காட்டிலும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டு மடங்கு களுக்கு மேல் செலவழிக்க இருக்கிறது நாடு. அப்படி அதிகப் படி தொகைகளைச் செலவழிக்கக் கூடிய தருணத்தில் நிச்சயமாக கொஞ்சமாவது விலைவாசிகள் உயரத்தான் செய்யும். இப்போது இருக்கும் அளவில் இதைக் கட்டுப்படுத்தி வைத்தால் அது மிகப் பெரிய சாதனையாக இருக்கும். ஓரளவுக்காவது விலை உயர்ந்தாலும் அந்த அளவுக்காவது கட்டுப்படுத்தப்பட்டால் அது பாராட்டக்கூடியதாக இருக்கும். அதிகப்படியான அளவுக்கு விலைவாசி உயர்ந்துக்கொண்டு போனுல் இப்போது கொடுத்திருக்கும் சம்பள உயர்வு உண்மையில் சர்க்கார் ஊழியர்களுக்குத் துணை புரியாது. இதனைத்தான் கனம் அங்கத்தினர் திரு. விநாயகம் அவர்கள் வெகு நன்ருகக் குறிப்பிட்டார்கள். ஒன்றிரண்டு ஆண்டு காலத்தில் சர்க்கார் ஊழியர்கள் கிளர்ச்சி செய்யத் துவங்கினுல் அப்போது என்ன செய்வது என்று கேட்டார்கள். விலைவாசி கட்டுப்படாது போனுல் நிச்சயமாக கிளர்ச்சி துவங்கத்தான் செய்யும். அந்தக் கிளர்ச்சிகள் துவங்குவதால் அவர்களைப் பற்றிக் குறை சொல்ல முடியாது—சொல்லவும் கூடாது. விலைவாசியைக் கட்டுப்படுத்துவது சர்க்காருடைய சட்டத்தின் மூலம் இயலாது என்ற பொதுப்படையான கருத்து ஆளும் கட்சி வட்டாரத்தில் இருப்பதாக நான் அறிகிறேன். விலைவாசி கட்டுப்படாது இருந்தாலும், சட்டங்கள் மூலமாக விலைவாசியைப் பூரணமாக கட்டுப்படுத்த முடியாது என்று நினைக்கும் மனப்பான்மையையும் நான் காண்கிறேன். ஜனநாயகத்தில் சட்டத்தின் மூலம் விலைவாசி கட்டுப்பட்டுத் தான் ஆக வேண்டும். தானுக மக்கள் உணரட்டும் என்று இருக்கலாம். ஆனுல் அதே நேரத்தில் இம்மாதிரியான சட்ட பூர்வமான முயற்சிகளின் மூலம் அந்த உணர்வை உண்டாக்க நாம் கடமைப்பட்டிருக்கிருேம்.

[Sri P. S. Chinnadurai] [22nd August 1960

ஆகையால், சட்டத்தின் மூலமாக சாதித்துவிட முடியுமா என்று கேட்கும் மனப்பான்மையை விட்டுவிட்டு, சட்டத்தின் மூலமாகச் செய்தாக வேண்டும், விலைவாசிகளை ஒரு சரியான நிலையான, நியாயமான அளவிலே வைத்திருப்பதற்குச் சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு என்பதை ராஜ்ய சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டும்; மத்திய சர்க்காரை ஒப்புக்கொள்ளும்படி ராஜ்ய சர்க்கார் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து ஆகும். விலைவாசி ஏறிவிட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல என்று வாதிப்பதோ, அல்லது விலைவாசி தாமாகவே இறங்கிவிடும் என்ற அளவிலே தேவையில்லாத நம்பிக்கை தெரிவிப்பதோ சரியானதல்ல என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நல்ல சம்பளக் கொள்கை நிர்ணயிக்கப்பட வேண்டுமானால், என்னுடைய கருத்துப்படி, இப்பொழுது கூட இந்தப் பஞ்சப்படி நிர்ணயம் செய்யப் பட்டிருக்கும் முறையானது அவ்வளவு சரியானது அல்ல, சற்று அதிலே மாறுதல் செய்ய வேண்டிய அவசியம் நேரலாம் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். ரூ. 150-க்குக் கீழே சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்குப் பத்து ரூபாய் பஞ்சப்படி என்று தீர்மானித்திருக்கிறார்கள். பத்து ரூபாய் பஞ்சப்படி என்பது, ஒரு பெருந்தொகை பஞ்சப்படி என்று இருந்ததை அடிப்படை சம்பளத்தோடு இணைத்தபோது சென்னையிலே விலைவாசி 125, 130 புள்ளி என்ற அளவிலே வைத்துத் தீர்மானித்திருக்கிறார்கள். இம்மாதிரி தீர்மானித்து சம்பளக் கமிஷன் இங்கே கொடுத்திருக்கும் அறிக்கையில் 29-வது பக்கத்திலே மிக நன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விலைவாசி ஒரு ஆண்டிலே பத்து புள்ளி உயர்ந்தால் மத்திய சர்க்கார் அதை அந்த அளவிலே வைத்து, அதற்கு உரிய கிராக்கிப்படி நிர்ணயம் செய்கிறார்களே, அம்மாதிரி நிர்ணயம் செய்வதை ராஜ்ய சர்க்காரோடு கலந்துக்கொண்டுதான் செய்ய வேண்டும். அப்படிச் செய்கின்ற போது மத்திய சர்க்கார் ஊழியருக்குக் கிடைக்கின்ற அதே அளவில் பஞ்சப்படி உயர்வுச் சலுகை ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு கிடைக்கும்படியான நிலைமையை ராஜ்ய சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ராஜ்ய சர்க்கார் கவனத்திற்கு இப்பொழுது நான் கொண்டுவர விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய வேலை நிறுத்தம் முடிந்த பிற்பாடு மத்திய சர்க்கார் தரப்பிலேயிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையிலே இம்மாதிரி, விலைவாசி ஒரு ஆண்டுக்குப் பத்து புள்ளிக்கு மேல் உயர்ந்தால், அதிலே பாதியை அவர்கள் பஞ்சப் படியாகவே கொடுத்து விடுவதாகவும், மீதமுள்ள பாதியை எந்த அளவுக்குத் தீர்மானிக்கலாம் என்பதை மத்தியஸ்தத்திற்கு விடலாம் என்றும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கும் அந்தச் சலுகையையே

22nd August 1960] [Sri P. S. Chinnadurai]

திருப்திகரமான சலுகை அல்ல; இருந்த போதிலும், கிடைக்கின்ற அந்த சாதாரண சலுகையாவது ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டும் எதிர் காலத்திலே, என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் எந்த அளவில் தங்களுடைய ஊழியர்களுக்கு இந்த அடிப்படைக்கு மேலே போய் ஒவ்வொரு ஆண்டுக்குப் பத்து புள்ளி உயரும் போது பஞ்சப்படியை சேர்த்துக் கொடுக்கப் போகிறார்களோ அதே விகிதாசாரத்திலே நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் பஞ்சப்படியைச் சேர்த்துக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை ராஜ்ய சர்க்கார் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் ராஜ்ய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கான ஒரு அறிவிப்பு ராஜ்ய சர்க்கார் தரப்பிலே கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது வரும் என்று எதிர்பார்க்கிறேன். மத்திய சர்க்கார் அதற்கான அறிவிப்பை அளித்துவிட்டார்கள். அப்படிப்பட்ட அறிவிப்பு நம்முடைய ராஜ்ய சர்க்கார்த் தரப்பிலிருந்தும் வரவேண்டுமென்று நான் உறுதியாக எதிர்பார்க்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையிலே பஞ்சப்படி சேர்த்து அளிக்கப் படுமேயானால், எதிர்காலத்தில் ஒருக்கால் விலைவாசி உயர்ந்தாலுங்கூட, அதைக் குறித்து பெரிய கிளர்ச்சி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் சர்க்கார் ஊழியர்களுக்கு நேராது; விலைவாசி ஏறுமானால் அந்த ஏற்றத்திற்குத் தக்கவாறு தாமாகவே பஞ்சப் படி ஏறும், விலைவாசி தாவும் என்று வைத்துக் கொள்ளுவோம். அதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள் சம்பளக் கமிஷன் அறிக்கையிலே. 100 புள்ளிக்கு கீழே போகுமானால் அப்பொழுது என்ன செய்வது, அப்பொழுது சம்பளத்தை எப்படிச் சரிக்கட்டுவது; என்பதைப் பற்றி ராஜ்ய சர்க்கார் ஆலோசிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் சரியானதுதான். சர்க்கார் நடவடிக்கையின் விளைவாக விலைவாசி குறைந்தால் அப்பொழுது சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் கூட்டத்தில் நான் இருக்க மாட்டேன். விலைவாசி குறைய வேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமான கோரிக்கையாகும். சம்பளம் உயர்த்த வேண்டும் என்று சதா சொல்லிக் கொண்டிருக்கும் அந்த நிலை, வேதனை தரத்தக்க ஒரு நிலை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகையால், விலைவாசிகள் கட்டுப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைப் பார்த்து ராஜ்ய சர்க்கார் கூற வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

ஏற்படுகின்ற அதிகச் செலவினத்தைச் சரிக்கட்ட புதிய வரிகள் போடக்கூடாதென்றால் என்ன செய்வது என்ற கேள்விக்கு சம்பளக் கமிஷன் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தினிடம் ரயில்வேக்கள் மூலமாகவும் மற்றும் கலால் வரி மூலமாகவும் நம்முடைய ராஜ்யத்திலேயிருந்து போகும் தொகையிலே இன்னும் கணிசமான அளவுக்கு அதிகப்படியான பங்கைப் பெற நம்முடைய ராஜ்ய சர்க்கார்

[Sri P. S. Chinnadurai] [22nd August 1960]

முயலவேண்டும். அந்த வகையிலேதான் கூடுதலான செலவைச் சரிக்கட்ட முடியுமே தவிர, வேறு வகையிலே சரிக்கட்ட முடியாது என்று நான் கூறுகிறேன். அதையும் சர்க்கார் கவனிக்க வேண்டிக்கொள்ளுகின்றேன்.

சம்பளக் கமிஷன் அறிக்கையிலே வேலை நேரத்தை அதிகப் படுத்தி, விடுமுறை நாட்கள் சிலவற்றைக் குறைத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டிருக் கின்றன என்று கூறும்போது, வேண்டாத சில விடுமுறை நாட்கள் கடந்த காலத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அந்த விடுமுறை நாட்களெல்லாம் இப்பொழுது ஓரளவுக்குக் குறைக் கப்படுவதிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், தொழிற்சங்க ஊழியன் என்ற முறையில் விடுமுறை நாட்கள் குறைக்கப்படுவது சற்று விரோதமாக இருந்தபோதிலும், ராஜ்ய சர்க்கார் ஊழியர்களைப் பொறுத்தவரையில், தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களைப்போல் அவர்களை நான் எண்ணவில்லை. ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள் ஒரு சிறப்பான பொறுப்பை மேற் கொண்டிருக்கிறார்கள். நல்லதொரு மேன்மையான, போற்றத் தக்க, சமூக ஊழியம் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பணி என்று நான் கருதுகிறேன். ஆகையால், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக் கூடியவர்கள் அதிக நாட்கள் விடுமுறை எதிர்பார்க்காமல் இருப்பது நல்லது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். வேலை நேரம் கூடியிருப்பதைப் பொறுத்த வரையில், வேலை நேரம் இப்பொழுது அரை மணி நேரம் கூட்டப்பட்டிருக்கிறதென்றால், அதில் ஒன்றும் தவறு இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

சர்க்கார்க் காரியாலயங்களிலே உண்மையிலேயே திறமை அதிகரிக்கவேண்டுமென்று மக்கள் வெகுவாக எதிர்பார்க் கிறார்கள். தாங்கள் செலுத்தும் வரிக்கும், தாங்கள் எதிர் பார்க்கும் சேவைக்கும் இன்னும் அதிகப்படியான ஈடுபாட்டை மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நான் இந்தச் சமயத்தில் சொல்வதை அவசியமாகக் கருதுகிறேன். இந்தச் சம்பளக் கமிஷன் சிபார்சுகள் அமுலாவதன் விளைவாக சர்க்கார்க் காரியாலங்களில் வேலை அதிகப்படுத்துவது மாத்திரமல்லாமல், வேலைத் திறமையும் அதிகமாகவேண்டும் என்பதுதான் மக்களுடைய கோரிக்கை. மக்களுடைய கோரிக்கையைச் சரியாகப் புரிந்துகொண்டு செயலாற்றினால்தான் எதிர்காலத்தில் ஏதாவது அவர்களுக்கு உதவி தேவை என்று இருந்தாலும்கூட, எதிர்காலத்தில் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு மக்களுடைய பொதுவான ஆதரவு தேவை என்று இருந்தாலுங்கூட, அது கிடைக்கும் என்று நான் இங்கே மிகவும் வலியுறுத்திக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

சர்க்கார்க் காரியாலயங்களில் இன்றைக்கு வேலைக்கு வருகிறவர்கள் தங்களுடைய காரியாலயங்களிலே புத்தகங்களை வைத்துப் படிப்பதைப்பற்றிக் கூட ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார். இது மறுக்க முடியாத, வருந்தத்தக்க, வேதனை

22nd August 1960] [Sri P. S. Chinnadurai]

தரத்தக்க உண்மை. படிக்க அவர்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது. வீட்டுக்குப் போய்ப் படிக்கலாம். ஆனால், ஒவ்வொரு சர்க்கார் ஊழியரும், அதிலும் புதிதாக வேலைக்குச் சேரும் ஊழியருடைய மேஜையிலே பல வகையான புத்தகம் இருப்பதைப் பார்க்கிறேன். நானும் ஒரு காரியாலயத்திற்குப் போயிருந்தேன். முக்கியமான பதிலுக்காகக் காத்திருந்தேன். ஆனால், மூன்று ஊழியர்கள் அவர்கள் ஆளுக்கு ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார்களே தவிர, மேஜையின் மேல் உள்ள ஃபைல்களைப் பார்க்கவில்லை. நானும் என்னை இன்னார் என்று சொல்லிக்கொள்ளவும் இல்லை; பேசாமல் உட்கார்ந்திருந்தேன். அவர்கள் ஏதாவது வேலை பார்த்துக் கொண்டிருந்தாலும் பொறுத்துக்கொள்ளலாம்; ஆனால், அவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். பத்து, பதினைந்து நிமிஷம் பொறுத்துப் பார்த்துவிட்டு பிறகு "தயவு செய்து கொஞ்சம் அப்புறம் படித்துக்கொள்ளுங்கள்; நான் உண்மையான வேலையாக வந்திருக்கிறேன், கவனிக்கிறீர்களா ?" என்று கேட்டேன். கவனிப்பதற்கு ஃபைல் கட்டுகள் மேஜை மீது இருக்கத்தான் செய்தன. இதைக் குறிப்பிடுவது அமைச்சர் மீது நான் குறை சொல்வதற்காக அல்ல. அமைச்சர்களைக் குறை சொல்ல முடியாது; என்னைத்தான் குறைசொல்ல வேண்டியிருக்கும். சர்க்கார் ஊழியர்களுடைய கோரிக்கையைக் குறித்து அதிகம் சட்டசபை உள்ளேயும் வெளியேயும் எடுத்து வாதித்துக்கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் இந்தக் குறைக்கு உண்டான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனையெல்லாம் விட்டுவிடுவது நல்லது. சட்டமன்றத்தில் இப்படிப் பட்ட பேச்சைப் பேசவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசவேண்டிய நிலைமை நேர்ந்திருக்கிறது. தொழிற்சங்கத் தலைவர்கள் பேசவேண்டிய நிலைமை நேர்ந்திருக்கிறது. அது சற்று வருந்தத்தக்க விஷயம்தான். அதற்காக எல்லோருமே அப்படி இருப்பார்கள் என்று அர்த்தமில்லை. பொதுப்படையாக பெருவாரியான பேர்கள் அப்படி இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. இந்த நிலைமைகள் எல்லாம் மாறத்தான் வேண்டும். செய்கின்ற வேலையைத் திருத்த, செவ்வையாக, சீக்கிரம் செய்யவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனைக் கருத்தில் கொண்டு ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள் இனிமேலாவது செயலாற்றத் தொடங்குவார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த அறிக்கையின் விளைவாக விளைந்திருக்கிற இந்த உபமான்யக் கோரிக்கையை நான் அங்கீகரிக்கிறேன். அங்கீகரிக்க முடியாத பல கோரிக்கைகளும் சபை முன்பு வந்திருக்கின்றன. ஆனால் இந்த உபமான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். இந்த உபமான்யக் கோரிக்கையை நிறைவேற்றிய பிறகு ஒரு ஆண்டுக் காலத்திலாவது விலைவாசிகளைச் சரியான முறையில் கட்டுப்படுத்தவேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, நல்லதொரு சம்பளக் கொள்கை மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலாவது உருவாக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதன் விளைவாக சர்க்கார் ஊழியர்

1-00 p.m.

களின் திறமையும் வெகுவாக அதிகரிக்க வேண்டும், மக்கள் பாராட்டத்தக்க அளவிலே என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

Sri M. R. KANDASWAMY MUDALIYAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பு கொண்டுவரப் பட்டிருக்கக்கூடிய உபமான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது பொருளாதாரத்துறையில் எவ்வளவோ நெருக்கடி ஏற்பட்டிருந்த நேரத்திலும் கூட, நம்முடைய சர்க்கார் தங்கள் ஊழியர்களுடைய சம்பளம் குறைவாக இருந்த காரணத்தினலே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நல்ல முறையில் அவர்கள் வாழ்க்கையை நடத்தவேண்டுமென்று கருதி, அவர்கள் நல்ல முறையில் வாழ வகையில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருந்தது நிவர்த்திக்கப்படவேண்டுமென்ற முறையிலே, பல கோடி ரூபாய் செலவில் அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க திட்டமிட்டு முன் வந்திருப்பதைப் பெரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறோம், வரவேற்கிறோம். அவர்கள் நல்ல நிலைமையிலே வாழ வேண்டும், நல்ல முறையிலே தேசத்திற்குப் பணி புரிய வேண்டும், தங்களுடைய கடமை களிலிருந்து தவறாமல் நாட்டிற்கு நல்லதோர் பணியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் இந்தச் சம்பள உயர்வைப் பெற்றாலும் இனிமேலாவது நல்ல முறையில் சர்க்காருடன் ஒத்துழைத்து வேலைகளைச் சரிவரச் செய்வார்கள் என்று நினைத்து, பொது மக்களிடமிருந்து வரி போட்டு வசூலித்த பல கோடி ரூபாயை அவர்களுடைய வாழ்க்கையின் நலத்திற்காகக் கொடுக்க நாங்கள் சம்மதித்து இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த தற்காக சம்பளக் கமிஷனைப் போற்றுகிறோம். சர்க்காரும் நெருக்கடியான பொருளாதார நிலைமையிலே கூட அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதற்காக தாராளமாக ஒத்துழைத்து மனப்பூர்வமாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருப்பது பற்றி அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதோடுகூட இன்று பெரியதோர் மாறுதலை நாம் சட்ட மன்றத்தில் காண்கிறோம். பல முறை அப்படித்தான் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம். சம்பள உயர்வு என்று சொல்லிக் கொண்டு மாத்திரம் தொழிலாளிகளையோ, என்.ஜி.ஓ.-க்களையோ தூண்டிவிட்டுக்கொண்டு வரக்கூடிய நிலைமை மாறி, நாட்டினுடைய நலனைக் கருதி நாட்டின் நல் வாழ்வுக்காக எதிர்க் கட்சியில் உள்ள தலைவர்களும் பாடுபடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். அந்த மாற்றத்தை நாம் இன்றைக்கு நம்முடைய நண்பர் ஸ்ரீ பி.எஸ். சின்னதுரை அவர்களிடம் காண்கிறோம். உண்மையாகவே எதிர்க்கட்சிகள் நாட்டிற்குச் செய்யவேண்டிய நற்பணிகளில் அது ஒன்று. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஏன்? அவர் இன்றைக்கு உள்ள நிலைமையை அப்படியே எடுத்துக்காட்டி,

22nd August 1960] [Sri M. R. Kandaswamy Mudaliyar]

குறைகளைக் களையவேண்டிய நிலைமையையும் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய நற்பணியையும் நன்கு உணர்ந்து இன்றைக்கு மனம் விட்டுப்பேசியது குறித்து நாம் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. எதிர்க்கட்சிகள் அந்த முறையில்தான் வேலை செய்யவேண்டும் என்று நாம் பல முறை வேண்டிக் கொண்டிருக்கிறோம். மற்ற நாடுகளிலும் அப்படித்தான் நடக்கிறது. இது எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் தெரியும். அந்த முறையில் இம்மாதிரி மாற்றத்தை இச்சபையில் காண்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதோடுகூட இந்தச் சம்பளக் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக சில விஷயங்களைக் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அவைகளையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதல் கிரேடு கிராம சேவக்குகளுக்கும், 2, 3 ஆண்டுகள் காலம் பயிற்சி பெற்று, அதற்குப் பிறகு எஸ்.ஈ.ஓ.-வாக வருபவர்களுக்கும் இந்தச் சம்பளக் கமிஷனில் குறிப்பிடப்பட்ட உயர்வுப் பிரகாரம் இரண்டு பேர்களுக்கும் சம்பளம் ஒரே அளவில் வைக்கப்பட்டிருக்கிறது. கீழே இருந்து வேலை செய்யக்கூடிய ஒரு நபருக்கும், அவருக்கு மேலே இரண்டு, மூன்று நபர்களை வைத்து வேலை வாங்கக்கூடிய ஒருவருக்கும் ஒரே சம்பளமாக இருப்பது எஸ்.ஈ.ஓ. செய்ய வேண்டிய வேலையைத் துரிதமாகவும் உற்சாகத்துடனும் செய்ய முடியாமல் இருக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் எஸ்.ஈ.ஓ.-வுக்கு வேலையில் உற்சாகம் குறைந்துவிடுகிறது. இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது, முதல் கிரேடு கிராம சேவக்குகளுக்கும், எஸ்.ஈ.ஓ.-க்களுக்கும் ஒரே சம்பளமாக இருக்கும் நிலைமை மாறி, எஸ்.ஈ.ஓ.-வுக்கு கொஞ்சம் அதிகச் சம்பள உயர்வு கொடுக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பதவியில் மாத்திரம் உயர்வு கொடுத்துவிட்டு, சம்பளம் இருவருக்கும் ஒரே மாதிரியாக இருந்தால், தனக்குக் கீழ் வேலை செய்யக்கூடிய ஒரு சிப்பந்திக்கும் ஒரே சம்பளம் இருந்தால், கௌரவம் மட்டும் உயர்ந்தால் போதுமா, அதற்கேற்ற சம்பள உயர்வும் இருந்தால்தானே கீழேயுள்ள சிப்பந்திகள் மதிப்பார்கள் என்று குறை சொல்லுகிறார்கள் எஸ்.ஈ.ஓ.-க்கள். அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நாட்டில் பல துறைகளிலே முன்னேற்றத்தைக் கொண்டுவந்திருந்தும் கூட, இன்னும் நாம் கவனிக்கவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. பல துறைகளிலே நாம் போடக்கூடிய பட்ஜெட்டைக் காட்டிலும் அதிகமாக செலவு ஆகிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இன்றைக்கு உபமான்யக் கோரிக்கைகள் நம் சபை முன்பு வந்திருக்கின்றன. அநேகமாக எல்லா இடங்களிலும் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் லைட் வசதி, போன் வசதி இருந்தும்கூட, கிராமங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் லைட் வசதி கிடையாது, போன் வசதி கிடையாது. பெரிய கிராமங்களில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்

[Sri M. R. Kandaswamy Mudaliyar] [22nd August 1960

களில் அம்மாதிரி வசதிகள் அவசியம் இருக்கவேண்டும். அந்த இடங்களிலே அந்த வசதிகளையெல்லாம் நாம் இன்னும் செய்யாமல் இருக்கிறோம். எவ்வளவோ செலவு செய்து உபமான்யக் கோரிக்கைகள் வருவதுபோல், இந்தச் செலவையும் அந்த உபமான்யக் கோரிக்கையில் சேர்த்து இம்மாதிரி கிராமத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு லைட் வசதி, போன் வசதி ஆகிய வசதிகளைச் செய்துதர வேண்டும். ஏனென்றால், மற்றவர்கள் 8 மணி நேரம்தான் வேலை செய்தாலும் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம் போதவில்லை என்று சொல்லக்கூடிய காலத்தில், இரவு பகலாக எந்த வேலையாக இருந்தாலும், எந்த நேரத்திலும், எதற்கெடுத்தாலும், செத்தாலும், வாழ்ந்தாலும், உடனே போலீஸ்காரர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்கள் எந்த நேரத்திலும், அந்த வேலையை நிறைவேற்றக்கூடிய டிபார்ட்மெண்டாக இருப்பதால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அவசியம் செய்துதரவேண்டும். இம்மாதிரி லைட் வசதி, போன் வசதி அவர்களுக்கு அவசியமாகச் செய்துகொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு கூட, ரூ. 200, 300 சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்குக்கூட வருமானம் போதவில்லை. விலைவாசி ஏறிக் கொண்டே போகிறது. அவர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டியது நியாயம் என்று எதிர்கட்சியில் உள்ள நண்பர்கள் பேசக்கூடிய தருணத்தில் கிராமாதிகாரிகள் சம்பளம் இன்னமும் உயராமல் இருப்பது மிகவும் வருந்தக்கூடிய விஷயம். அவர்கள் முழு நேர ஊழியர்களா, அல்லது அரை நேர ஊழியர்களா, அவர்களை எந்த முறையில் சேர்க்க வேண்டும் என்பது பரிசீலனையில் இருந்தாலும்கூட, இன்றைக்கு உள்ள நிலைமையிலே மற்றவர்களெல்லாம் விலைவாசி அதிகமாகிக் கொண்டிருக்கிறது, ஆகவே சம்பளம் கூடுதலாக வேண்டும் என்று சொல்லக்கூடிய காலத்தில், ரூ. 20, 30 சம்பளத்தில் கிராமாதிகாரிகள் வேலை செய்து, அவர்கள் தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றி, குழந்தைகளைப் படிக்க வைத்து, அவர்களும் நாட்டில் நல்ல முறையில் வாழவேண்டுமென்றால், அது சாத்தியப்படாத நிலையில் இருக்கிறது. கிராம அதிகாரிகளுக்கு வேலை குறைவாக இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. பல இடங்களில் பிளாக்குகள் ஏற்படுத்தி, எல்லா புள்ளி விவரங்களை அவர்களே சேகரித்துக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இன்றைக்கு அரசாங்கத்தில் நடக்கக்கூடிய எந்த அலுவலாக இருந்தாலும், எந்தப் புள்ளி விவரம் வேண்டுமென்று சொன்னாலும், கிராம அதிகாரிகள் இல்லாமல் சேகரிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதன் காரணமாக, அவர்களுக்கு 12 மணி நேரம் இல்லை, 18 மணி நேரமும் வேலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. அடிக்கடி அதிகாரிகள் வருகிறார்கள். அவர்களும் வெளியே போக வேண்டியிருக்கிறது. பிளான் தயாரிக்க வேண்டியிருக்கிறது.

22nd August 1960] [Sri M. R. Kandaswamy Mudaliyar]

புள்ளிவிவரம் சேகரிக்க வேண்டியிருக்கிறது ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கக்கூடிய வேலைகளே அவர்கள் செய்ய முடியாத அளவுக்கு பளுவாக இருக்கக்கூடிய காலத்தில் மேற்கொண்டு அவர்களுக்கு வேலை அதிகமாக இருக்கக்கூடிய நிலைமை காரணமாக, கிராம அதிகாரிகளுக்கு அவசியம் சம்பளத்தைக் கூட்டிக்கொடுக்க உடனே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். அந்த நிலைமையில் அவர்களுக்குக் கீழே வேலை செய்யக்கூடிய தோட்டிகளுக்கும் சம்பளம் உயர்த்திக் கொடுப்பது நியாயம் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் கூட பல முறை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது என்று சம்பளத்தை உயர்த்திக்கொடுத்திருக்கிறோம். இன்னும் இப்பொழுது நாம் போடக்கூடிய திட்டங்களினால் ஏற்படும் பொருளாதார உயர்வினால், மீண்டும் பொருள்களின் விலை உயர்ந்து கொண்டே போனால், மறுபடியும் சம்பள உயர்வுக் கிளர்ச்சியும் ஏற்படப் போகிறது என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் குறிப்பிட்ட அளவு சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு விலைவாசியின் உயர்வினால் இவ்வளவு போனஸ் கொடுக்கவேண்டும், இவ்வளவு சம்பள உயர்வு கொடுக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறோம். ஆனால், வாழ்க்கைத் தரத்தில் கீழ்த் தட்டிலே உள்ள தொழிலாளிகள், மற்ற மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள், அவர்களை எந்த நிலையில் வைத்திருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்; அவர்களும் இந்த விலைவாசி உயர்வினால் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களும் எப்படி வாழ்வார்கள் என்று சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இனிமேல் இந்தச் சம்பள உயர்வை மேற்கொண்டும் செய்வதனால், அப்படிச் செய்வதற்கு முன்னால், மற்ற தொழிலாளிகள், கவர்மெண்டு சிப்பந்திகள், ஆலைத் தொழிலாளர்கள் நீங்கலாக, ஏனைய தொழிலாளர்கள், மக்கள், வாழ்வு உயரும் வரை, இனிமேல் சம்பள உயர்வை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி யில்லையானால், நாட்டில் கொந்தளிப்பும் குழப்பமும் ஏற்படும். ஏற்கனவேயே அதிருப்தி வளர்ந்து வருகிறது. குறிப்பிட்ட தொகை வாங்குகிறவர்களுக்கு சம்பளத்தை அடிக்கடி உயர்த்திக்கொண்டே போகிறோம்; அதற்காக வரிகளைப் போடுகிறோம். மக்கள் வரிப் பளுவைச் சுமக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட மக்களின் பொருளாதார உயர்வுக்கு வழி செய்யும் வரை மற்ற மக்களும், அதிகச் சம்பளம் வாங்குகிற வர்களின் நிலைக்கு வரும் வரையிலாவது, இவர்களுக்கு இனிமேல் சம்பள உயர்வு கொடுப்பதை நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அம்மாதிரி ஊழியர்களைக் கிளர்ச்சி செய்யச் சொல்லி, எதிர்க் கட்சித் தலைவர்கள் அவர்களைத் தூண்ட வேண்டாம் என்று பணிவோடு, நாட்டின் நன்மையைக்

கருதி, மக்களின் நன்மையைக் கருதி, வேண்டிக் கொள்ளுகிறேன். கனம் திரு. சின்னதுரை சொன்னபடி, விலைவாசிகள் ஏறினாலும், தயவுசெய்து மற்றவர்களின் வாழ்க்கை வசதிகளையும் அவர்களிடம் எடுத்துச் சொல்லி மற்றவர்களும் அவர்கள் அளவுக்கு வரும்வரை அமைதியாக இருக்கச் சொல்லி நாட்டில் அமைதியை ஏற்படுத்த வேண்டும். அப்படியில்லாமல், கிளர்ச்சிகளுக்கு அவர்கள் ஆளானால், நாட்டில் பலவிதமான குழப்பங்கள் தான் ஏற்படும். ஆகவே, அதை எதிர்கட்சித் தலைவர்கள் உணர்ந்து, சர்க்கார் ஊழியர்களையோ அல்லது ஆலைத்தொழிலாளர்களையோ, கிளர்ச்சிக்குத் தூண்ட வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காகப் பல கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறோம். சிறு படிகள், பக்கெட்டுகள், வாணலி போன்ற சிறு சாமான்கள் செய்யும் கிராமத் தொழில்களுக்கு இரும்பு கோட்டா கிடைப்பதில்லை. வேண்டிக் கேட்டுக் கொண்டால், ஆறு மாதத்திற்குக் குறைந்து அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, கிராம மக்கள் பொருளாதாரம் உயர்வதற்கும், இம்மாதிரியான சிறு தொழில்கள் அபிவிருத்தியாவதற்கும், அவர்களுக்கு இரும்புக் கோட்டா அவ்வப்பொழுது கிடைக்கச் செய்வது சர்க்காரின் கடமை என்பதை எடுத்துச் சொல்லி, அதில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் ஊழியர்களுக்கு வேலை நேரம் அதிகமாகி விட்டது என்று கனம் திரு. பழனிசாமி சொன்னார்கள். இந்த வேலை நேர அதிகரிப்பைக் கண்டு எந்த ஊழியர்களும் வருத்தப்பட மாட்டார்கள். அவர்கள், பொறுப்புள்ளவர்கள், ஏற்கனவேயே, ஒரு மணி, இரண்டு மணி நேரம் அதிக வேலை செய்கிறார்கள். கடமையை உணர்ந்தவர்கள், லீவு நாட்களில் கூட வந்து வேலை செய்கிறார்கள். அதையும் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே, எந்த ஊழியரும், நிச்சயமாக இந்த அரைமணி அதிகரிப்பைக் கண்டு, வருந்த மாட்டார்கள். கொடுத்திருக்கும் அதிகச் சம்பளத்தைக் கொண்டு, மனத் திருப்தியோடு வேலை செய்வார்கள். அப்படிச் செய்யக் கூடிய ஊழியர்களை எதிர்க் கட்சியிலுள்ளவர்கள், அரசாங்கத்திற்கு தொந்தரவு கொடுக்க வேண்டும், அரசாங்க அலுவல்கள் ஸ்தம்பிக்க வேண்டும் என்று கிளர்ச்சிகள் செய்யத் தூண்ட வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொண்டு, இந்த உபமானியக் கோரிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI D. S. AUTHIMOOLAM: மிஸ்டர் டெபிடி ஸ்பீக்கர், ஸார், இந்தக் கோரிக்கைக்கு முக்கிய காரணம், இப்பொழுது பே கமிஷன் ரிபோர்டை அமுல் நடத்துவது. இந்த மானியம் கொண்டு வந்ததற்கு அடிப்படையான இரண்டு காரணங்களைக் கண்டு மிக்க சந்தோஷம் அடைகிறேன். ஒன்று,

22nd August 1960] [Sri D. S. Authimoolam]

இந்திய சர்க்கார், ப்ளானிங் கமிஷன் இவைகளின் கொள்கைக்கு மத்தியில், கட்டுப்பட்ட இந்த சர்க்கார், ஏழு கோடி ரூபாய் அதிகமாகச் சம்பளம் கொடுக்கப் போகிறேம் என்று தைரியமாக டெல்லியில் பேசி, அவர்கள் உத்தரவையும் வாங்கிக் வந்தது. பொக்கிஷ இலாகா மந்திரியவர்களின் பெரிய அசீவ்மெண்ட் ((achievment.)) என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அடுத்தடுத்து, இந்த வரி போட்டு, அந்த வரி போட்டு, பல லோன்களை எழுப்பி எல்லாம் செய்துக் கொண்டிருக்கும் கொள்கையிருக்கும்போது, தைரியமாக ஏழு கோடி ரூபாய்க்கு உதவி வாங்கித் வந்தது பாராட்டத் தக்க விஷயம் தான். இரண்டாவதாக, பஞ்சப்படி என்ற ஒரு கெட்ட வார்த்தையைக் காலி பண்ணினதும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். யுத்தம் வந்ததால், பஞ்சப் படியும் வந்தது ; யுத்தம் நின்று போய் இன்று 14, 15 வருஷங்கள் ஆகின்றன. அதன் பிறகு நமக்கு சுதந்திரமும் வந்திருக்கிறது. அதன் விளைவாக நமக்கு ஏராளமான சொத்துக்கள் கிடைத்திருக்கின்றன. ஸ்டர்லிங் பாலன்ஸில் 2,000 கோடி ரூபாயும்—ஏதோ பொருளாதார நிபுணர் போல் பேசுகிறேனே என்று நிதியமைச்சர் அவர்கள் என்னைப் பார்க் கிறார்கள் ; அப்படியொன்றும் இல்லை, சாதாரணமாக ஏதோ சொல்கிறேன்—ரெயில்வே மூலமாக ஆயிரம் கோடி ரூபாயும், அப்படிப் பலவகைகளிலும், ஏராளமான வரிகள் போட்டு அதன் மூலமாகவும், ஏராளமான பணம் கிடைத்திருக்கிறது. அப்படி யிருந்தும், இந்த நாட்டில் பொருள்களின் விலையைக் கட்டுப்பாடு பண்ண முடியவில்லை. மக்களுக்கு எல்லாமே தெரியவதில்லை; ஆனால், இப்பொழுது சுதந்திரா கட்சி ஏற்பட்ட பிறகு, நம் ஒப்பற்ற தலைவர் ராஜாஜி அடிக்கடி சொல்லி வருவதன் பலனாக, கொஞ்சம் கொஞ்சம் எல்லோருக்கும் தெரிய ஆரம்பித்திருக் கிறது. பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதுதான் சர்க் காரின் தலையாய கடமை. திட்டம் போடுகிறேம், திட்டம் போடுகிறேம் என்கிறார்கள். எல்லா சர்க்காருந்தான் திட்டம் போடுகிறார்கள். அப்பொழுது இருந்த சர்க்கார் கூடத்தான், மேட்டூர் அணையை, ரூபாய்க்கு ஏழு படி அரிசி விற்கும் காலத்தில், ரூ. 6 கோடி ரூபாய்க்குக் கட்டினார்கள். பதினான்கு கோடி ரூபாயில் பாபநாசம் ஹைட்ரோ எலெக்ட்ரிக் ப்ராஜக்டைக் கட்டினார்கள். சர்க்கார் என்றால், எந்த திட்டமும் செய்யத்தான் வேண்டும். ஆனாலும், விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டியது அவர்களின் முதற்கடமை; அப்படிக் கட்டுப்பாடு செய்து, மக்கள் வாழ்க்கைத் தரத்திற்கு அடங்கின முறையில் நீங்கள் காரியங்களைச் செய்யச் சொல்ல வேண்டும், "நீங்கள் செய்ய வேண்டுமென்றால்" இந்திய சர்க்கார் செய்ய வேண்டும் என்றுதான் அர்த்தம் கொள்ள வேண்டும். நீங்கள் அவர்களைத் தூண்டி அப்படிப்பட்ட காரியங் களைச் செய்யச் செய்யவேண்டும். விலைவாசி உயர்வு காரணத்தினால், சர்க்கார் சிப்பந்திகள் சம்பள உயர்வு கேட்டால், ஏதோ அடலட் பிராஞ் சைஸ் காலத்தில், என்ன பண்ணுகிறது கொடுத்துத்தான்

ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் கொடுத்திருக்கிறீர்கள்; கொடுத்த வரையில் சந்தோஷம். நாங்களும் மகாநாடுகளில் கொடுங்கள், கொடுங்கள் என்று பேசியிருக்கிறோம். காரணம், 14 வருஷ ஆட்சியில் ஏற்பட்டிருக்கிற அடிப்படைக் கோளாறுகளிலிருந்து நிர்ப்பந்தம் வருகிறது.

விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசும்போது, மந்திரிகளும், மற்றவர்களும், முன்னேற்றகரமான பொருளாதாரத் திட்டத்தில், விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாதது என்று சொல்கிறார்கள் ; சரி. முன்னேற்றகரமான திட்டம் எப்படியிருக்கிறது என்று பார்த்தால், முன்னேற்றம் ஒரு சிலருக்குத்தான் இருக்கிறது ; மற்றபடி பொதுவாக இந்த நாட்டில் எல்லாருக்கும் முன்னேற்றம் இல்லை. தொழில் அதிபர்களுக்கு முன்னேற்றத்திற்கு மேல் முன்னேற்றம் இருக்கிறது; பல கோடி ரூபாய்கள் இன்கம்டாக்ஸ் வசூலாகமலிருக்கிறது. அதில் இன்ப்ளுயன்ஷியல் பார்ட்டிகள் ஏதோ சமாளிக்கிறார்கள். ஆகவே, முன்னேற்றம் ஒருசில இடத்தில்தான் இருக்கிறது. மற்றபடி மக்கள் எல்லோரிடத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுவிடவில்லை. பரவலாக ஏற்படவில்லை. பேப்பர் இம்போர்ட் பண்ணுகிறவர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அவர் லைசென்ஸ் வாங்கியிருக்கிறவர்; பவுண்ட் நாலரையணவுக்கு வாங்கி, இம்போர்ட் பண்ணி, ஒரு ரீம் ரூ. 8, 9 அடங்கினல், பவுண்ட் ரூ. 1-4-0 அல்லது ரூ. 1-2-0 என்று விற்று பேப்பர் கோட்டா உள்ளவர்கள் முன்னேற்றம் காண்கிறார்கள்.

ஆகவே பெரிய பெரிய ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டுக் கொண்டு வருவதால் நாடு பூராவும் செலவு அதிகமாகி இருக்கிறது. முன்னேற்றமடைய அடைய எங்கு பார்த்தாலும் ப்ளாக் மார்க்கெட்டாகிவிட்டது. இதையெல்லாம் தவிர்க்க இந்த மந்திரிசபை தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டாகவேண்டும். இந்த நாட்டிலுள்ள 35 கோடி மக்களில் 5 கோடி மக்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். பாக்கி இருக்கக்கூடிய முப்பது கோடி மக்கள் இந்த விலைவாசி உயர்வால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது நடுத்தர வாசிகளும் கீழ்த்தர வாசிகளும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே விலைவாசிகளைக் கட்டுப்படுத்தினல்தான் மக்களிடத்தில் இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் வருவதற்கு அவசியம் இருக்காது.

மேலும் இந்த ரிப்போர்டில் இன்று கதரைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். கதருக்கு புதியதாக ஒரு போர்டை அமைக்கப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு முன் மின்சார போர்டு வந்தது. அது ஆல் இந்தியா பாலிசியில் வந்தது. அதனல் மின்சார போர்டை அமைத்து அது இப்பொழுது தனியாகப் போய்விட்டது. இந்த அசெம்பளியில் அது சம்பந்தமாக நமக்கு இருந்த உரிமைகள் எல்லாம் போய் விட்டன. அதன் ரிப்போர்ட்டைப்பற்றிப் பேசுகிறோம், படிக்கிறோம். அந்த அளவில்தான் அது இப்பொழுது இருக்கிறது. அது பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிக்குக் கூட வராது. அதைப் போலவேதான் இந்தக் கதர் விஷயமும்

22nd August 1960] [Sri D. S. Authimoolam]

பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிக்கு இனி வராது. கதர் என்கிற விவகாரமே மகாத்மா காந்தியால் அந்தக் காலத்தில் தேசிய இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு நமக்கு விடுதலை கிடைத்தது. அது முதற் கொண்டு நாம் கதர் கட்டிக்கொண்டு வருகிறோம். அந்தக் காலத்திலிருந்து அந்தத் துணியை நாம் போட்டுக் கொண்டிருக்கிறோம். வேறு துணியைப் போட்டுக் கொள்வது இல்லை. அந்த அளவில் தான் அது இருக்கிறது. அதற்கு இப்பொழுது சர்க்கார் க்ராண்ட் கொடுக்கப் போகிறார்கள். மக்களுடைய வரிப் பணத்தில் இருபது அல்லது முப்பது கோடி ரூபாயை இதற்குச் செலவழிக்கப் போகிறார்கள். இப்பொழுது ஏதோ கிராமோத்யோக்பவன் என்று ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். அங்கே ஏதோ நல்ல பலகாரம் கொடுக்கிறார்கள், அது நன்றாகத்தான் இருக்கிறது. கைக்குத்தல் அரிசி கொடுக்கிறார்கள். அதை வாங்கிக்கொண்டுபோக சௌகர்யமாக இருக்கிறது. அதற்கு மரியாதை காட்ட வேண்டியதுதான். அதற்கு இவ்வளவு தூரம் ரிபேட் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படி ஜனங்களுடைய வரிப் பணத்தை வீணாக்க வேண்டாம், விரயம் செய்ய வேண்டாம். இது சம்பந்தமாக குடிசைத் தொழிலை அமைப்பது எல்லாம் சரியல்ல. இதையெல்லாம் செய்தால் பணத்தை வீண் விரயம் செய்வதாக ஆகும். ஜனங்களுடைய வரிப்பணத்தை நல்ல முறையில் செலவு செய்வதாக ஆகாது. சாதாரணமாக சென்னைக்கு வரும்போது பத்து வேஷ்டிகளை எடுத்துக் கொண்டுவந்தால் அவற்றில் நான்கு அல்லது ஆறு வேஷ்டிகள் கிழிந்திருக்கும். அவ்வளவு பலஹீனமானதாக இருக்கிறது கதர்த்துணி. இதனால் கதர் கிராமத் தொழில் குடிசைத் தொழிலாக வளராது. அதை அபிவிருத்தி பண்ணவே முடியாது. இதற்கு முன்னால் சர்க்காருடைய நேரடி நிர்வாகத்தில் இருந்தது. இப்பொழுது தனி போர்டாக ஆகப்போகிறது. இதைப் பார்த்தால் பார்ட்டி ப்ராபகேண்டா மாதிரிதான் இருக்கிறது. பார்ட்டிக்கு வேண்டிய காரியங்களையெல்லாம் இப்படிச் செய்து கொண்டு வருகிறீர்கள். ஒவ்வொருவருக்கும் வேலைகிடைக்கும் என்பதாக இல்லை. தன்னுடைய பார்ட்டி ஆட்களுக்கு வேலை கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் இப்படியெல்லாம் செய்கிறார்கள். இவைகள் எல்லாம் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு வராது. ஆகவே இது ரொம்பவும் வருந்தத்தக்க சமாசாரம். திருவாங்கூரில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்தினார்கள். அங்கு பார்ட்டி முறையில் நடத்தப்படுகிறது என்று அவர்களைப் போக்கி விட்டீர்கள். அதே மாதிரி தான் இங்கும் பார்ட்டி சிஸ்டத்தில் காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன இங்கு அஹிம்சை முறையில் எல்லாம் நடைபெறுகின்றன என்று சொல்லப்படுகிறது. இங்கு நான் வயலன்சு நடப்பதாகவும் அங்கு வயலன்சு நடந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே இங்கு காரியங்கள் எல்லாம் தன்னுடைய பார்ட்டிக்கு வேண்டிய காரியங்களாக நடத்தப்படுவதாகத் தெரிகிறது. அவர் (நிதி மந்திரி) என்னைப் பார்க்கிறார், அவர் அப்படிப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது.

DEPUTY SPEAKER : Chair -ஐ பார்த்துப் போசுங்கள், வேறு எங்கேயும் பார்த்துப் பேச வேண்டாம்.

